# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்13 வள்ளுவர் ஆண்டு 2029 ஆனி 31 புதன்கிழமை (15-07-1998) UTHAYAN – A Lively National Tamil Daily கதிர்: 196


பொது சன நூலகம் 15 JUL 1998 மாநகராட்சி யாழ்ப்பாண

# மாகாணத் தேர்தல் குறித்து அமைச்சரவை இன்று முடிவு

## நவம்பருக்கு ஒத்திவைக்கப்படலாம்

கொழும்பு, ஜூலை 15

தென்னிலங்கையின் ஐந்து மாகாண சபைகளுக்குமான தேர்தல்களை அடுத்த மாதம் நடத்துவதா அல்லது அவற்றை ஒத்திவைப்பதா என்பது குறித்து இன்று கூடும் அமைச்சரவையின் கூட்டத்தில் முடிவு செய்யப்படும் என கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

மேற்படி ஐந்து மாகாண சபைகளில் மூன்று சபைகளுக்கான தேர்தல்கள் தொடர்பாக வேட்பு மனுக்கள் ஏற்கப்பட்டு விட்டன. மேல் மாகாண சபை, சப்ரகமுவ மாகாண சபை ஆகியவற்றுக்கான வேட்பு மனுக்களை ஏற்றுக்கொள்வதற்கான கால எல்லைஇன்று நண்பகல் 12 மணியுடன் முடிவடைகின்றது.

தேர்தலை ஒத்தி வைப்பதற்கான பணிப்புரை ஏதும் இன்னும் தேர்தல் திணைக்களத்துக்குக் கிடைக்கவில்லை இதன் காரணமாக திட்டமிட்டபடி தேர்தலை அடுத்த மாதம் நடத்துவதற்கான ஏற்பாடுகளை தேர்தல் திணைக்களம் தடையின்றி மேற்கொண்டு வருவதாக அத்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

மாகாணத் தேர்தல்களை

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வேலை நிறுத்தம்

திருகோணமலை, ஜூலை 15

இடர்காலக் கொடுப்பனவு வழங்கக் கோரி திருமலை நகரசபை ஊழியர்கள் இன்று வேலை நிறுத்தத்தில் குதிக்கவுள்ளனர்.

வடக்கு - கிழக்கில் உள்ள ஏனைய மாவட்டங்களில் இந்தக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளபோதும், தமக்கு இதுவரை வழங்கப்படவில்லை என்று அவர்கள் தெரிவித்துள்ளனர். (உ-1-3)

### வடக்கில் தரித்துள்ள

## 'ஓஷன் கரியர்' கப்பலில் கடல் நீர் புகுந்தது!

### பொருள்கள் பல நாசம்

வடமராட்சி, ஜூலை 15

பருத்தித்துறையில் தற்போது தரித்துள்ள ''ஓஷன் கரியர்'' என்ற கப்பலின் அடித்தளத்தில் ஓட்டை ஏற்பட்டுள்ளதால் அக்கப்பலுக்குள் கடல்நீர் உட்புகுந்துள்ளதென தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பிலிருந்து வரும் போதே கப்பலில் கடல்நீர் உட்புகத் தொடங்கிவிட்டது என்றும்–

அச்சத்தின் காரணமாக கப்பலில் பணியாற்றும் சிப்பந்திகளில் ஏழுபேர் திருகோணமலையில் இறங்கி விட்டனர் என்றும்–

சொற்ப சிப்பந்திகளுட

(10 ஆம் பக்கம் பார்க்க)

## சிறுநீரைப் பருகுமாறு வற்புறுத்தி "ராகிங்"!

### ஐந்து மாணவர் கைது!!

கொழும்பு, ஜூலை 15

பொலன்னறுவை ராஜசிங்க மத்திய மகாவித்தியாலயத்தில் உயர்தர வகுப்புக்கு புதிதாகச் சேர்ந்த மாணவர்களை சிரேஷ்ட மாணவர்கள் பகிடி வதைக்கு (ராகிங் நடவடிக்கைக்கு) உட்படுத்திய சமயம், சலகூடத்தில் தேங்கி நின்ற சிறுநீரை அள்ளிக் குடிக்கும்படி வற்புறுத்தியதாகவும் —

அதைச் செய்ய மறுத்த புதிய மாணவர்கள், சிரேஷ்ட மாணவர்களால் நையப்புடைக்கப்பட்டதாகவும் —

ஒரு மாணவரின் காதைப் பொத்தி அடித்ததால்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் கடலில் வைத்து 4 இந்திய மீனவர் கைது!

கொழும்பு, ஜூலை 15

மன்னார் இரணைதீவுக் கடலில் 4 இந்திய மீனவர்கள் உட்பட 5 பேர் கடற்படையினரால் நேற்று அதிகாலை கைதுசெய்யப்பட்டனர் என அறிவிக்கப்படுகின்றது.

கைது செய்யப்பட்ட மற்றவர் இலங்கைத் தமிழராவார்.

கைப்பற்றப்பட்ட மீன்பிடிப் படகிலிருந்து சுமார் 5 இலட்சம் ரூபா பெறுமதியான பல்வேறு பொருள்களும் மீட்கப் பட்டதாகக் கடற்படை வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-21)

## மேலும் 90 பட்டதாரிகள் ஆசிரிய நியமனம் பெறுவர்

திருகோணமலை, ஜூலை 15

வடக்கு—கிழக்கில் 1996ஆம் ஆண்டுக்குப் பின்னர் வர்த்தக, முகாமைத்துவ துறைகளில் பட்டம் பெற்ற பட்டதாரிகளில் 90 பேருக்கு எதிர்வரும் 20 ஆம் திகதி நியமனம் வழங்கப்படவிருக்கின்றது.

இந்த நியமனம் பெறுபவர்களுக்கான நியமனக் கடிதங்கள் அன்றைய தினம்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஓகஸ்ட் 9 இல் புலமைப்பரிசில் பரீட்சை

கொழும்பு, ஜூலை 15

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை அடுத்த மாதம் 9 ஆம் திகதி நடைபெறவிருக்கிறது.

யாழ். மாவட்டத்தில் 76 நிலையங்களில் இந்தப் பரீட்சை நடைபெறவிருக்கிறது. (உ-3)

## திருமலையில் சுற்றிவளைப்பு

திருகோணமலை நகரப் பகுதி நேற்றுக் காலை திடீரெனச் சுற்றிவளைக்கப்பட்டது.

நகரின் பிரதான வீதிகளில் சென்ற சகல வாகனங்களும் வழிமறிக்கப்பட்டு அவற்றில் சென்றோர் விசாரிக்கப்பட்டதாகவும் —

அப்பகுதியில் உள்ள வீடுகளும் சோதனை செய்யப்பட்டதாகவும் — தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## கிழக்கில் விமானக் குண்டு வீச்சு!

மட்டக்களப்பு ஜூலை 15

மட்டக்களப்பு - பொலநறுவ மாவட்டங்களின் எல்லையில் தொப்பிக்கல பிரதேசத்தில் நேற்று காலை கிபீர் விமானங்கள் தாக்குதல்களை மேற்கொண்டன.

விடுதலைப் புலிகளின் தளம் என அடையாளம் காணப்பட்ட நிலைகள் மீது இத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன என பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-21)

### மட்டுப்படுத்தப்பட்ட

## இராணுவ நடவடிக்கை முரசுமோட்டையில்!

கொழும்பு, ஜூலை 15

கிளிநொச்சி மாவட்டத்தின் மேற்குப் பகுதியில் முரசுமோட்டைப் பகுதியில் நேற்று முன்தினம் மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கை ஒன்றைப் படையினர் மேற்கொண்டனர்.

இந்த நடவடிக்கையின்போது அப்பகுதியில் விடுதலைப் புலிகள் அமைத்திருந்த 4 பங்கர்களைப் படையினர் ஆர்.பி.ஜி. தாக்குதல் மூலம் அழித்ததாகவும் —

இத்தாக்குதலில் 9 விடுதலைப் புலி உறுப்பினர்கள் உயிரிழந்தனர் என்றும் —

படை வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-3-6)

## ஜி. சீ. ஈ. (உ. த.) பரீட்சை 3 ஆம் திகதி தொடங்கும்!

கொழும்பு, ஜூலை 15

அடுத்த மாதம் 3ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கும் ஜி. சீ. ஈ. (உயர்தர) பரீட்சைக்கான ஏற்பாடுகள் யாவும் பூர்த்தியாகியுள்ளன என பரீட்சைத் திணைக்களம் தெரிவித்தது.

இந்தப் பரீட்சையில் ஒரு லட்சத்து 52 ஆயிரத்து 199 பேர் தோற்றுகிறார்கள்.

பாடசாலைகளில் இருந்து ஒரு லட்சத்து 30 ஆயிரத்து 733 பேர் தோற்றுகிறார்கள்.

தனிப்பட்ட பரீட்சார்த்திகளில் புதிய பாடத்திட்டத்தில் 21 ஆயிரத்து 466 பேரும் பழைய பாடத்திட்டத்தில் 27 ஆயிரத்து 274 பேரும் தோற்றுகிறார்கள்.

விடைத்தாள் மதிப்பிடும் வேலைகள் அடுத்த மாதம் 20 ஆம் திகதி முதல் கொழும்பில் நடைபெறவிருக்கின்றன. (உ-3)

### கொழும்பு, கம்பஹா

## பாடசாலைகளுக்கு 'சார்க்'கை ஒட்டி விடுமுறை

கொழும்பு, ஜூலை 15

கொழும்பில் எதிர்வரும் 29 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை நடைபெறவிருக்கும் 'சார்க்' உச்சிமாநாட்டை ஒட்டி கொழும்பு. கம்பஹா மாவட்டங்களில் உள்ள பல பாடசாலைகள் 2 ஆம் தவணை விடுமுறைக்காக நான்கு நாள்கள் முன்னதாக —எதிர்வரும் 27 ஆம் திகதி முதல் — மூடப்படவிருக்கின்றன.

(10ஆம் பக்கம் பார்க்க)

### லலித் கொலை பற்றிய

## ஆணைக்குழு சிபார்சை ஆட்சேபித்து வழக்கு!

கொழும்பு, ஜூலை 15

முன்னாள் அமைச்சர்லலித் அத்துலத் முதலி கொலை தொடர்பாக விசாரணை நடத்திய ஆணைக் குழுவின் பரிந்துரைகளுக்கு எதிராக மூத்த சிரேஷ்ட பிரதிப் பொலீஸ்மா அதிபர் ஏ.எஸ். செனவிரத்தின தாக்கல்செய்துள்ள மனு இன்று உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்படவிருக்கிறது.

இந்தப் பரிந்துரைகள் அநீதியானவையும் சட்டபூர்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி ஆணைக்குழு கூரேக்கு அழைப்பு

கொழும்பு, ஜூலை 15

அரசாங்கஸ்தாபனங்களில் ஊழல்களை விசாரணை செய்யும் விசேட ஜனாதிபதி ஆணைக்குழு முன்னாள் ஐ. தே. க. அமைச்சர் சிறிசேன கூரேயை எதிர்வரும் சனிக்கிழமை காலை 9-30 மணிக்கு ஆணைக்குழு முன் ஆஜராகுமாறு அழைப்பாணை விடுத்துள்ளது.

ஆணைக்குழுவினால் நடத்தப்படும் ஒரு விசாரணை தொடர்பாக அவரது வாக்கு மூலத்தை அன்றைய தினம் ஆணைக்குழு பதிவு செய்யும் எனத் தெரிவிக்கப்பட்டது.

முன்னைய ஐ. தே. க. அரசில் கூரே சிரேஷ்ட அமைச்சராக இருந்தார். ஐ. தே. கவின் செயலாளராகவும் அவர் பதவி வகித்துள்ளார்.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தந்தை பேர்க்மான்ஸின்

# இன்னிசை நற்செய்தி பெருவிழா யாழ். நகரில்

யாழ்ப்பாணம், ஜூலை 15

பிரபல பாடகரும், இறை பணியாளருமான தந்தை பேர்க்மான்ஸ் அவர்களின் இன்னிசை நற்செய்திப் பெருவிழா இன்று புதன்கிழமை தொடக்கம் தொடர்ந்து மூன்று நாள்களுக்கு யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறும்.

ஒவ்வொரு நாளும் பிற்பகல் 3.30 மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

இன்னிசை நற்செய்திப் பெருவிழா ஏற்கனவே மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டரங்கில் நடைபெற்று முடிந்தது தெரிந்ததே.

யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் 3 நாள்கள் நடைபெற்ற பின்னர் இப்பெருவிழா 18 ஆம், 19 ஆம் திகதிகளில் செங்குந்தா இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

பல கிறிஸ்தவ அமைப்புக்கள் இணைந்து இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்துள்ளன. (இ)


குருநகர் புனித கார்மேல் அன்னையின்

**திருவிழா**

நற்கருணை ஆராதனை: இன்று (15-07-98) புதன்கிழமை பி. ப. 5-15 மணி.

திருவிழா திருப்பலி:- 16-07-98 வியாழக்கிழமை காலை 6-30 மணி.

திருப்பலியைத் தொடர்ந்து திருச்சொருப பவனியும் அன்னையின் ஆசீரும் இடம்பெறும்.

ஆலயப் பங்குத் தந்தையும், மக்களும்.

பாங்சால் வீதி,
குருநகர், யாழ்ப்பாணம். (57608)



**நாகஸ்ஸ் சினிமா**

சுன்னாகம்.

9 வருட இடைவெளிக்குப் பின் மீண்டும் திரைப் படக்கூட்டுத்தாபன (ரீல்ஸ்) படங்கள் நாகம்ஸ் வெண் திரையில் காண்பிக்கப்படுகின்றன.

15 - 07 - 98 புதன் முதல்

சுப்பர் ஸ்ரார் ரஜனி - மீனா செந்தில் நடித்த **முத்து**

காட்சிகள்:- 10-30, 2-30

(57604)


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
திருமதி ஜெ. கந்தவேள் அவர்களின்
அன்பு மாமியார்

திருமதி
**மகேஸ்வரி நடராசா**

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
யா/ பெரியபுலம் மகாவித்தியாலயம்.

(57601)

## மரண அறிவித்தல்

### முருகர் பாலு

உடுவில் புதுமடத்தை சேர்ந்த முருகர் பாலு 14 - 07 - 98 இல் காலமானார்.

இவர் திருமதி சின்னப்பிள்ளையின் கணவரும், திருமதி சரஸ்வதி இராசேந்திரம் (முன்னாள் ஆசிரியர் மானிப்பாய் St, Anns), திருமதி அன்னம்மா ஞானப்பிரகாசம், அமரர் பா. சிவராசா, பா. அமிர்தராசா (ரிங்கர் ரத்தினம்), திருமதி கமலாதேவி சின்னத்துரை, பா. திலகராசா (ஆசிரியர், கோப்பாய் நாவலர் வித்தியாலம்), பா. பத்மராசா, பா. வரதராசா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், S. S. இராசேந்திரம் (ஆசிரியர், அவிசாவளை), ப. ஞானப்பிரகாசம், திருமதி சி. புஸ்பா, திருமதி அ. நாகரத்தினம், V. சின்னத்துரை, திருமதி தி. ஞானம்மா (ஆசிரியர் கோப்பாய் சரவணபவானந்தா), திருமதி ப. தங்கம்மா, திருமதி வ. மைதிலி ஆகியோரின் அன்பு மாமனாரும், R. தேன்மொழி, கருணாநிதி, R. ராஜ்குமார் (பொறியியலாளர், லண்டன்), மேரி ஜெனிஸ் ரெலசிற்றா, வர்னடேத், ஞானேஸ்வரி, ஞானவதி, ரவீந்திரன், பாஸ்கரன், பத்மகலா, பதமவிஜி, சுதானந்தராசா, பத்மகோமதி, ராஜ்மோகன, கலையமுதா, கபிலபாரதி, அமுதவாசுகி, திலக்குமார். அருண்குமார், சுகிர்தினி, பத்மரூபன், பத்மகவிதா, பத்மமயூரன், பிரபாத் ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இன்று (15-7-98) பகல் 2 மணியளவில் பிப்பிலி மயானத்துக் எடுத்துச் செல்லப்படும்.

தகவல்!
பாலு திலகராசா
(ஆசிரியர்)

உடுவில் தெற்கு,
புதுமடம், மானிப்பாய். [57603]

## உயர் வகுப்பு மாணவருக்கு கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 15

யாழ்ப்பாணம், ஆரியகுளம் புதிய உயர்கல்லூரியில் நடைபெற்றுவரும் ஜி. சி. ஈ. உயர்தர மாணவர்களுக்கான கருத்தரங்குத் தொடரில் எதிர்வரும் 18 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்குப் புவியியலும், முற்பகல் 11 மணிக்கு இந்துநாகரிகமும், பிற்பகல் 1மணிக்குத் தமிழும் நடைபெறவுள்ளன. (இ-8)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 15

கோண்டாவில் இந்து மகா வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா இன்று காலை 9.30 மணிக்கு வித்தியாலய அதிபர் செல்வி பா. மார்க்கண்டு தலைமையில் இடம் பெறவுள்ளது.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஓய்வுபெற்ற அதிபர் வெற்றிவேலு திருமதி நாகேஸ்வரி வெற்றிவேலுதம்பதிகள் பிரதம விருந்தினர்களாகவும் நல்லூர் பல நோக்குச் கூட்டுறவுச் சங்கத்தலைவர் பெ. கனகசபாபதி சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். [உ-7]

## தபாற் பொதிகள் வந்தன

யாழ்ப்பாணம், ஜூலை 15

யாழ். மாவட்டத்துக்குரிய —வெளியூர் தபால்கள்— அடங்கிய 35 தபாற்பொதிகள் நேற்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பல் மூலம் இங்கு எடுத்து வரப்பட்டன.

தபால்களைத் தரம்பிரித்து விநியோகிக்கும் பணிகள் இன்று முதல் ஆரம்பமாகும் என யாழ். பிரதம தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-7)


**லிபேட்டி தியேட்டர்**

அச்சுவேலி.
இன்று மட்டும்
சிவாஜி நடித்த
**பார் மகளே பார்**
வியாழன், வெள்ளி
**நட்புக்காக**
சனி, ஞாயிறு
விஜயகாந்த் - ப்ரிதா
ஆகியோர் நடித்த
**தர்மா**
நேரம்:- 10-30, 2-30
(பழைய நேரம்)
Tele. No: 070 - 212223
(57502)



**ராஜா டாக்கீஸ்**

யாழ்ப்பாணம்.
மம்முட்டி - அஞ்சு
கோசி, மஞ்சுளா
விஷ்ணுவரதன் நடித்த
**சத்ரிய வம்சம்**
தினசரி
10-30 — 2-00. 5-00
(புதிய நேரம்)
(சி/4222)



4 ஆவது பிரிவு
ஆரம்பம்: 19-07-98

**OXFORD ENGLISH ACADEMY**

ஆலடிப்பிள்ளையார்
வீதி,
சுப்பர் மடம்,
பருத்தித்துறை.
[அனுமதிக்கு முந்துங்கள்]
(57589)


## சமய சந்திகளில்

யாழ்ப்பாணம், ஜூலை 15

அல்லைப்பிட்டி புனித உத்தரியமாதா ஆலய திருவிழாவின் இறுதி நாளான இன்று மாலை 4.30மணிக்கு நற்கருணை ஆராதனையும், நாளை காலை 7.30மணிக்கு அன்னையின் திருவிழாத் திருப்பலியும் இடம்பெறும்.

பங்குத்தந்தை மவுலிஸ் அடிகள் திருப்பலியை நிறைவேற்றுவார். (இ-37)

★ ★ ★

நல்லூர் மேற்கு வீதியில் அமைந்துள்ள முத்துவிநாயகர் ஆலய மணவாளக்கோல தினமான இன்றுபுதன்கிழமை காலை 10 மணிக்கு சங்காபிஷேகம் நடைபெறும். மறுநாளை பிற்பகல் 4 மணிக்கு வைரவர் பூசை இடம் பெறும். [இ-3]

★ ★ ★

யாழ். வண்ணைகலட்டி எச்சாட்டி மாரியம்மன் தேவஸ்தான மஹோற்சவம் கடந்த திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து பதினைந்து நாள்கள் உற்சவம் நடைபெறும்.

எதிர்வரும் 26ஆம் திகதி தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் இடம் பெறும். (இ-ரி)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூலை 15

உடுவில் கிழக்கு கற்பகப் பிள்ளையார் கோயிலில் இன்று புதன்கிழமை காலை 9 மணிமுதல் 10.16 மணி வரையுள்ள சுபமுகூர்த்தத்தில் மகாகும்பாபிஷேகம் இடம் பெறும். (இ-ரி)

★ ★ ★

யாழ். கல்வியங்காடு அருள்மிகு இலங்கைநாயகிமனோன்மணி அம்பாள் ஆலய வருடாந்த உற்சவம் நாளை வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆடி மகம் நட்சத்திர தினம் அன்று தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும், இடம்பெறும். (இ-30)

★ ★ ★

சாவகச்சேரி அருள்மிகு ஸ்ரீதுர்க்கை அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் நேற்று செவ்வாய்க்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

எதிர்வரும் 22 ஆம் திகதி திருவாதிரை நட்சத்திர தினம் அன்று தேர்த்திருவிழாவும், மறுநாள் ஆடி அமாவாசை தினத்தன்று தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். (இ-30)

மானிப்பாய் மருதடி விநாயகர் தேவஸ்தான கும்பாபிஷேகதினம் இன்று புதன்கிழமை நடைபெறஉள்ளது. பகல் (1008) நவோத்தர சகஸ்ரசங்காபிஷேகம் நடைபெற்று மாலை அழகிய பூந்தண்டிகையில் விநாயகப் பெருமான் வீதிவலம் வருதல் இடம் பெறும். (இ-90)

★ ★ ★

கொழும்புத்துறை, ஜூலை 15

இருபாலை கிழக்கு அருள்மிகு ஸ்ரீகந்தசுவாமி கோயிலில் (முனிஅம்பாள் கோயில்) இன்று புதன்கிழமை காலை 5.30 மணிக்கு தூபிஅபிஷேகம் நடைபெறும். தொடர்ந்து சூரியஉதயம் கோதூளி முகூர்த்தத்தில் மஹாகும்பாபிஷேகம் இடம்பெறும். (இ-30)

★ ★ ★

தொல்புரம் வழக்கம்பரை அம்பாள் ஆலய வருடாந்த சங்காபிஷேகம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. அம்பாளுக்கு 1008 சங்காபிஷேகம் நடைபெற்று நண்பகல் அன்னதானம் இடம்பெறும். மாலை அம்பாள் அழகிய பூந்தொட்டியில் வீதியுலா நடைபெறும் காட்சியும் இடம்பெறும். (இ-28)

★ ★ ★

யாழ். குருநகர் புனித கார்மேல் அன்னையின் வருடாந்தப் பெருவிழா கடந்த 9ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

நாளை வியாழக்கிழமை காலைத் திருவிழா கூட்டுத் திருப்பலியும் அதனைத் தொடர்ந்து அன்னையின் திருச்சொரூப பவனியும்இடம் பெறும். (இ-30)

★ ★ ★

புலோலி வடமேற்கு முருகையன் ஆலய தீர்த்த உற்சவம் இன்று காலை 10 மணிக்கு நடைபெறவிருக்கின்றது. (உ-109)

★ ★ ★

ஊரெழு கிளானைப்பதி பர்வதபத்தினி (மனோன்மணி) அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவம் நாளை வியாழன் காலை 10மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 12 தினங்கள் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த் திருவிழாவும், 27 ஆம் திகதி திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். மகோற்சவ கிரியைகளை சிவஞானபாஸ்கரன் சிவஸ்ரீ சோ. வாகீஸ்வரக் குருக்கள் நடத்திவைப்பார். (உ-7)

## விமானக் கொள்வனவு முறைகேடு விசாரணை

கொழும்பு, ஜூலை 15

விமானப்படைக்கு விமானங்கள் மற்றும் ஆயுதங்கள் கொள்வனவு செய்ததில் இடம்பெற்றதாகக் கூறப்படும் முறைகேடுகள் குறித்து விசாரணை செய்யும் குழு எழுத்து மூலமான சாட்சியங்களை தற்சமயம் பெற்று வருகிறது.

இக்குழு முன்பாக ஆறு சாட்சிகள் சாட்சியமளிக்க முன்வந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

முன்னாள் இராணுவத் தளபதிகள் இருவர் இவர்களில் அடங்குவர்.

விமானங்கள், ஆயுதங்கள் கொள்வனவு செய்த நிறுவனங்களுடனும் தொடர்பு கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இக்குழு அதன் அறிக்கையை அடுத்தமாத இறுதியில் ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (இ-3)


## வீடு தேவை

யாழ். போதனா வைத்தியசாலை வைத்திய உத்யோகத்தர் தங்குவதற்கு சகல வசதிகளையும் கொண்ட ஆறு அறைகளையுடைய வீடு ஒன்று வைத்தியசாலைக்கு மிக அண்மையில் தேவைப்படுகின்றது. வாடகைக்குக் கொடுக்க விரும்புபவர்கள் உடனடியாகப் பணிப்பாளருடன் தொடர்பு கொள்ளவும்.

செல்வி நவமலர் கனகரட்ணம்
(பணிப்பாளர்)
யாழ். போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

(சி/4286)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தஞ்சம் கோருவோர் விடயத்தில் பிரிட்டனின் பிடி மேலும் இறுகுகிறது

## ஒரு தடவை மட்டுமே மேன்முறையீடு செய்யலாம்

லண்டன், ஜூலை 15

பிரிட்டனில் அரசியல் தஞ்சம் கோருபவர்களது விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுக்கப்படும் முறையை மாற்றும் திட்டங்களை பிரிட்டிஷ் அரசு அறிவித்துள்ளது.

தீர்ப்புக்கு எதிராக பல மேன் முறையீடுகளைச் செய்யும் சாத்தியக்கூறுள்ள தற்போதைய நடைமுறை மாற்றப்படவுள்ளது.

எதிர்காலத்தில் விண்ணப்பம் நிராகரிக்கப்படும் போது ஒரு முறை மட்டுமே மேன் முறையீடு செய்யமுடியும்.

தற்போது 75 ஆயிரம் அரசியல் தஞ்சம் கோரும் விண்ணப்பங்கள் பிரிட்டனில் பரிசீலனையில் உள்ளன.

அத்துடன் மேன் முறையீட்டுக்கு 5 ஆண்டுகள் வரை செல்லலாம். இந்த கால அவகாசம் மேன் முறையீட்டை

உலக அரங்கில்

எளிதாக்குவதால் இதனைக் குறைக்கலாம் என பிரிட்டிஷ் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையில் பிரிட்டனின் இந்தத் திட்டத்தை அரசியல் தஞ்சம் கோருபவர்களது அமைப்புக்கள் எச்சரிக்கையுடன் வரவேற்றுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் புதிய நடைமுறையில் அரசியல் தஞ்சம் கோருபவர்களுக்கு மேம்பட்ட சட்டப் பிரதிநிதித்துவம் வேண்டுமென அவை கருத்துவெளியிட்டுள்ளன. (இ-8)

## ஜப்பானில் ஆளும் கட்சி தோல்வி பிரதமர் ஹசிமோட்டோ பதவி துறப்பு

ரோக்கியோ ஜூலை 15

ஜப்பானின் நாடாளுமன்றத் தேர்தல்களில் ஆளும் லிபரல் ஜனநாயகக் கட்சி அதிர்ச்சியூட்டும் வகையில் தோல்விகண்டதையடுத்து பிரதம ஹசிமோட்டோ தனது பதவியை ராஜினாமா செய்து விட்டார்.

இந்தத் தோல்விக்குதான் பொறுப்பேற்றுக்கொள்வதாக ஹசிமோட்டோ தனது அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

50 ஆண்டுகளாக ஏகபோக அதிகாரம் செலுத்தி வந்தஅவரது கட்சி மேலவையில் 17 இடங்களை இழந்து விட்டது. பிரதமரின் பதவி விலகலையடுத்து பங்குவிலைகளும், ஜென்னின் மதிப்பும் முதலில் சரிந்து பின் ஓரளவு உயர்ந்தன.

ஆளும் கட்சியின் இத் தோல்வி ஜப்பானிய பொருளாதாரம் சீர்செய்யப்படும் வாய்ப்பைக் கேள்விக்குறியாக்கி விட்டது. (இ-8)


மெதடிஸ்த திருச்சபை

**தொழிற்பயிற்சி நிலையம்**

161, 163, 165 பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

மேற்கண்ட நிலையத்தில்
தையல் பயிற்சி ஆரம்பம்.

சேரவிரும்புவோர்
17 - 07 - 98 வெள்ளிக்கிழமை
பி. ப. 3. 30 மணிக்கு சமுகந்தரவும்.

- முகாமையாளர்

120, 2 ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம். (சி/4281)



**கண்ணீர் அஞ்சலி**

யா / நெல்லியடி ம. ம. வித்தியாலய ஆசிரியர்
ஐயாத்துரை சண்முகலிங்கம்
அவர்களின் தந்தை

**ஐயாத்துரை**

அவர்களின் மரணத்தால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவித்துக் கொள்வதோடு அமரரின் ஆத்ம சாந்திக்கும் பிரார்த்திக்கின்றோம்.

நெல்லியடி ம. ம. வி.
அதிபர். ஆசிரியர். ஊழியர்,
மாணவர்கள்.

(சி/4280)



நீங்காத நினைவில் ஏழாம் ஆண்டு



மலர்வு 21 — 07 — 1914

உதிர்வு 15 — 07 — 1991

**அமரர் A.F. ராசு**
(Retired P.W.D Store Keeper)

ஆண்டுகள் ஏழு ஓடி மறைந்தாலும்
உங்கள் நினைவுகள் எம் நெஞ்சை விட்டு நீங்காது!
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

மனைவி,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

222, குருசோ வீதி,
சுண்டிக்குளி. (57592)


## பங்களாதேஷில் வெள்ளம் 16 பேர் பலி!

பங்களாதேஷில், பருவப்பெயர்ச்சி மழை கடுமையாகப் பெய்வதைத் தொடர்ந்து நாட்டின் வட பகுதியிலும், தென் கிழக்குப் பகுதியிலும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

மொத்தம் சுமார் 5 லட்சம் மக்கள் உடைமைகளை இழந்தனர்.

வீடுகளிலிருந்து வெளியேற வேண்டிய கட்டாய நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்த மக்களுக்கு தங்குமிட வசதியும், உணவு வசதியும் செய்வதற்கு உரிய நடவடிக்கைகள் மேற் கொள்ளப் படுவதாகவும், —

வெள்ளப் பெருக்காலும் மண் சரிவாலும் இதுவரை 16 பேர் இறந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-8)

## பங்குகள் வீழ்ச்சி

ஜப்பானிய மேல் சபைத் தேர்தலில் ஜப்பானின் ஆளும் கட்சி தோல்வி கண்டு பிரதமர் ஹஷிமோட்டோ பதவியை ராஜினாமாச் செய்ததை அடுத்து ஹொங்ஹொங் பங்குச் சந்தையில் ஜப்பானின் பங்குகள் பெரிதும் வீழ்ச்சி காணத்தொடங்கியுள்ளன. (இ-ரி)

## காங்கிரஸுடன் சேர சுப்பிரமணியசுவாமி அழைப்பு



காங்கிரஸ் கட்சித் தலைவர் திருமதி சோனியாகாந்தியும், அ. தி. மு. க பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதாவும் இணைந்து மத சார்பற்ற கட்சிகளின் முன்னணி ஒன்றை உருவாக்கி பாரதீய ஜனதாவை ஆட்சியிலிருந்து அகற்ற முன்வர வேண்டுமென ஜனதாக் கட்சித் தலைவர் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி அழைப்பு விடுத்துள்ளார். (இ-8)

## விமானம் வெடித்துச் சிதறியது

மொஸ்கோ, ஜூலை 15

ரஷ்யா நோக்கிச் சென்று கொண்டிருந்த அஜர்பைஜானின் சரக்கு விமானம் ஒன்று 8 சிப்பந்திகளுடன் வானில் வெடித்துச் சிதறியது.

இந்த விமானத்தைத் தேடும் பணிகளும், மீட்புப் பணிகளும் நடைபெற்று வருகின்றன. [இ-8]

## சைப்ரஸுக்கு ரஷ்ய விமான எதிர்ப்புப் பீரங்கி

மொஸ்கோ ஜூலை, 15

ரஷ்ய அதிபர் யெல்ட்ஸினும் சைப்பிரஸ் அதிபர் கிளாசஸ்கிளறிடிக்சும்மொஸ்கோவில் சந்தித்த போது சைப்பிரஸுக்கு விமான எதிர்ப்புப் பீரங்கிகளை விற்கும் சர்ச்சைக்குரிய ஒப்பந்தமொன்றை நடைமுறைப் படுத்தப்போவதாக அறிவித்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியமும், அமெரிக்காவும், ஐ.நா. மன்றமும் இந்த உடன்படிக்கையை ரத்துச் செய்யும்படி சைப்பிரஸிடம் கோரியிருந்தன.

அதேசமயம்இந்தஏவுகணைகள் திட்டமிட்டபடி நவம்பர் மாதத்தில் பொருத்தப்பட்டால் துருக்கி பதில் தாக்குதலை நடத்துமென எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது. (இ-8)


ROTARACT CLUB

சுன்னாகம்
**றோட்டரக்ட் கழகம்**

**'சுருதி' மலர் வெளியீடும் 4 ஆவது பதவியேற்பு வைபவமும்**

இடம். யா/ இராமநாதன் கல்லூரி
காலம்: 15-07-1998 புதன்கிழமை
பிற்பகல் 3-00 மணி

பிரதம விருந்தினர்: Rtn. A. பஞ்சலிங்கம்
(தலைவர், யாழ். றோட்டறிக்கழகம்)

கௌரவ விருந்தினர்: Rtn. K. சிறிபதி
(செயலாளர், யாழ். றோட்டறிக்கழகம்)

சிறப்பு விருந்தினர்: திருமதி ஆ. சிவஞானசுந்தரம்
(அதிபர், யா/ இராமநாதன் கல்லூரி)

அனைவரையும் அழைக்கின்றோம்.

Rtr. வி. ப. சசீவர்ணன்
தலைவர் 97/98

(சி/4282)



உ
சிவமயம்



**நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபை**

**விஷேட அறிவித்தல்**

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுத சுரபி அன்னதான சபையினரின் வருடாந்த பொதுக் கூட்டம் 11-07-98 சனிக்கிழமை சபைத் தலைவர் திரு. த. சிவானந்தன் அவர்கள் தலைமையில் பி. ப. 5 மணிக்கு நடைபெற்றது. கூட்ட முடிவில் அம்பாளின் உயர் திருவிழாக் காலத்துடன்– இனிமேல் தைப் பூசம் மற்றும் பிரதி வெள்ளிக்கிழமைகளிலும் அன்னதானம் செய்வது எனச் சபை ஏகமனதாகத் தீர்மானித்துள்ளது. இதன் பிரகாரம் 17 - 07 - 98 வெள்ளிக்கிழமை முதல் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் அன்னதானம் நடைபெறும் என்பதனை அம்பிகையின் அடியார்களுக்கு அறியத்தருகின்றோம்.

கு. சாந்தலிங்கம்
கௌரவ செயலாளர்

(57597)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

கலட்டிச் சந்திக்கும் நாச்சிமார் கோயிலடிக்கும் இடையில் இராமநாதன் வீதியில் ஒரு பொதி (Bag) 11-07-98 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். ந. செந்தில்நாதன், அளவெட்டி மேற்கு, அளவெட்டி.

(57583)

13. 07. 98 திங்கட்கிழமை கலட்டி அம்மன் கோயில் வாசலில் தாணுஐயர் – மகாதேவ (மகாதேவக்குருக்கள்) ஆகிய எனது 373421192V என்னும் இலக்கமுடைய தேசிய அடையாள அட்டையும், விசேட அடையாள அட்டையும் ஒரு தொகைப் பணமும் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கலட்டி அம்மன் கோயிலில் அல்லது இணுவில் கண்ணகை அம்மன் கோயிலில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(57568)

### O/L MATHS

Distinction, Credit பெறுபேறுடைய (ஆண்டு 9, 10 உட்பட) ஆரம்பத்தில் இருந்து Paper Class வரை கற்பிக்கப்படும். அனுபவமுள்ள ஆசிரியர் 85, சிவன் கோயிலடி, சிவன் கோயில் மேற்குவீதி, திருநெல்வேலி.

(57571)

### தேவை

பாவித்த நல்ல நிலையில் உள்ள கடை றாக்கைகள், கண்ணாடி அலுமாரிகள் மற்றும் கடைக்கான தளபாடங்கள் உடனடியாகத் தேவை. விற்பனை செய்ய விரும்புவோர் தாமதியாது கடிதம் மூலம் தொடர்பு கொள்ளவும். இல. 759, மே/பா உதயன்.

(57581)

### நூல்

பொதுஅறிவுப் பூங்கா நூல் வெளிவந்து விட்டது. மாணவர் புலமைப் பரிசில் தேர்வுகள், பொதுப் பரீட்சைகள் போன்றவற்றிற்கும் அறிவை வளர்க்கவும் உபயோகமானது. தொகுப்பாசிரியர் ஆ. சண்முகலிங்கம், விலை ரூபா 33. எங்கும் கிடைக்கும். 52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

[57534]

### விற்பனைக்கு

இரும்புப் பெட்டகம் (Iron Safe) விற்பனைக்குண்டு தொடர்பு: இல. 144, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்.

(57582)

### வீடு வாடகைக்கு

யாழ். பருத்தித்துறை வீதியில் நீர்வேலிச் சந்திக்கு அண்மையில் சகல வசதிகளும் கொண்டதும் 2000 சதுரஅடி விஸ்தீரணம் உடையதுமான வீடு உடன் வாடகைக்குக் கொடுக்கப்படும். தொடர்பு இல. 758. மே/ பா உதயன் (57567)

## வீடு பாதிப்புக்கு நஷ்ட ஈடு

யாழ்ப்பாணம், ஜுலை 15

போரினால் அசையும் அசையாச் சொத்துக்களுக்கு ஏற்பட்ட அழிவுகளுக்கு நஷ்ட ஈடு வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஆயிரத்து 500 ரூபாவுக்கு மேல் வருமானம் பெறும் அரச, கூட்டுத்தாபன சபைகளின் ஊழியர்கள் அல்லாத பொதுமக்களுக்கு இழப்புகளுக்கேற்ப ஒருலட்சம் ரூபாவுக்கு உட்பட்ட தொகையை அல்லது மொத்த அழிவில் இருபது வீதத்தை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

24-07-1983 ஆம் திகதிக்குப் பிற்பட்ட பயங்கரவாத நடவடிக்கைகளினால் ஏற்பட்ட அழிவுகளுக்கே இந்த நஷ்ட ஈடு வழங்கப்படும் என்று வடக்கின் மீள் குடியேற்ற புனர்வாழ்வு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இதேவேளை ஆயிரத்து 500 ரூபாவுக்கு கீழ் வருமானம் பெறுவோரில் வீடுகள் முற்றாக பாதிக்கப்பட்டவர்களுக்கு 25 ஆயிரம் ரூபா வீதம் கொடுப்பனவு வழங்கப்படும் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

இக் கொடுப்பனவைப் பெறுவதற்கு யாழ். மாவட்டத்தில் 60 ஆயிரம் பேர் விண்ணப்பித்துள்ளனர். எனினும் இதுவரை இக்கொடுப்பனவு வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(இ-5)

## 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 12 – 05 – 1936



மறைவு 15 – 07 – 1991

அமரர்

**கணபதி செல்வராஜா**

( இளைப்பாறிய மின் இணைப்பாளர் )

நேசமுடன் நாமுயர வழி செய்தாய்
மீளாத்துயில் கொண்ட பாசக் குல விளக்கே!
பாசமிகு கணவராய், அன்புத் தந்தையாய்,
மேன்மைமிகு மாமனாய், ஆசைச் சகோதரனாய்,
அன்பு மைத்துனராய், பெரிய தந்தையாய்,
பேராளனாய், நல் நண்பனாய், உற்றாருக்கும்
மற்றோருக்கும் நல் மனத்தினனாய் இருந்து
எங்களைவிட்டுப் பறந்து போய் ஏழு ஆண்டாகினும்
ஆறுமோ எம் மனம் மறக்குமோ நின் நினைவு?
உயிர் பிரிந்து உடல் அழிந்தாலும் நின்
நினைவுகள் எம் நெஞ்சை விட்டகலாது.

நீங்காத நினைவுகளுடன்
அன்பு மனைவி,
பாசமிகு பிள்ளைகள்,
மருமக்கள்.

கல்லூரி வீதி,
காங்கேசன்துறை.

(57529)

## ஜனாதிபதி ஆணைக்குழுமுன்

# பாஸ்கரலிங்கத்தை மீண்டும் ஆஜராக பணிப்பு!

கொழும்பு, ஜுலை 15

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியின் போது சில அரச நிறுவனங்களில் இடம்பெற்றதாகக் கூறப்படும் முறைகேடுகள் சம்பந்தமாக விசாரணை செய்யும் ஜனாதிபதிஆணைக் குழுவின் முன்னிலையில் மீண்டும் ஆஜராகுமாறு நிதி அமைச்சு திறைசேரி ஆகியவற்றின் முன்னாள் செயலாளர் ஆர். பாஸ்கரலிங்கத்துக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

இது தொடர்பாக ஏற்கனவே ஆணைக்குழு எடுத்திருந்த சில முடிவுகளை உயர் நீதிமன்றம் சமீபத்தில் இரத்துச்செய்திருந்தது. சட்டமா அதிபர் விடுத்த வேண்டுகோளைக் கவனத்தில் கொண்ட ஆணைக்குழு இம் மாதம் 25 ஆம் திகதி மீண்டும் ஆணைக்குழு முன்னிலையில் சமுகமளிக்குமாறு அவரைப் பணித்துள்ளது.

முன்னாள் அமைச்சர் சிறிசேன குரேயும் இம்மாதம் 18 ஆம் திகதி ஆணைக்குழுவின் முன் ஆஜராக வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-9)

# ஆடு, மாடுகளைக் கட்ட இன்று வரை அவகாசம்

வலி.தென்மேற்கு, ஜுலை 15

கட்டாக்காலி ஆடு, மாடுகளை இன்று 15ஆம் திகதிக்கு முன்னர் பிடித்துக் கட்டும்படி நவாலி விவசாய சம்மேளனம் பகிரங்க அறிவித்தல் ஒன்றை விடுத்துள்ளது.

15 ஆம் திகதிக்குப் பின்னர் நவாலியில் இருந்து பிடிக்கப்படும் மாடுகளுக்கு கடுமையான தண்டப்பணம் அறவிடப்படுவதுடன் 48 மணித்தியாலங்களில் உரிமை கோரப்படாத கட்டாக்காலிகள் ஏலத்தில் விடப்படவுள்ளன.

இது தொடர்பாக உடுவில் கமநல கேந்திர நிலையம் சகல சம்மேளனங்களுக்கும் அறிவித்தல் ஒன்றை விடுத்துள்ளது.

(இ-185)

## பிரெஞ்சு தொண்டு நிறுவன பிரதிநிதி யாழ்ப்பாணம் வருகிறார்

வலிகாமம்தெற்கு, ஜுலை15

பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த அரச சார்பற்ற நிறுவனமான பட்டினிக்கெதிரான நிறுவனத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி அடுத்தவாரம் யாழ்ப்பாணம் வருகிறார்.

எதிர்வரும் திங்கட்கிழமை யாழ்ப்பாணம் வர உள்ள இவர் யாழ்ப்பாணக் குடாநாட்டில் அண்மைக்கால போராட்டங்களினால் பாதிக்கப்பட்ட விவசாயத் திட்டங்கள் பலவற்றை மீளவும் நல்லநிலைக்குக் கொண்டு வருவதற்கான முயற்சிகளில் ஈடுபடுவார்,

இதற்காக அவர் விவசாய சம்மேளனங்கள் மற்றும் விவசாயத்துடன் தொடர்புடைய முக்கியஸ்தர்கள் பலரைச் சந்தித்துக் கலந்துரையாடுவார்.

வலிகாமம் வடக்கு, வலிகாமம் தெற்கு, வலிகாமம் கிழக்கு மற்றும் வலிகாமம் தென்மேற்குப்பிரதேச செயலகங்களில் உள்ள பல்வேறு கிராமசேவையாளர் பிரிவுகளிலும் உள்ள விவசாய சம்மேளனங்களினூடாகத் தெரிவு செய்யப்பட்ட 25 விவசாயிகளுக்கு மேற்கொள்ளப்பட்டுவரும் பழமரச் செய்கை பற்றிய பயிற்சி வகுப்புகளையும் அவர் பார்வையிடுவார்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் பழமரச் செய்கையை ஊக்குவிப்பதற்காக முதற்கட்டமாக பயிற்சியில் கலந்துகொள்ளும் 5 ஆயிரத்துக்கு மேற்பட்ட விவசாயிகளுக்கு தலா ஐந்து பழமரக் கன்றுகளையும், ஒரு மண்வெட்டியையும் இவர் இலவசமாக வழங்குவார் என்று தெரிவிக்கப்பட்டது.

(இ-152)

## வேலையற்ற பட்டதாரிகள் சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜுலை 15

வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு ஆரியகுளத்துக்கு அண்மையில் உள்ள புதிய உயர் கல்லூரியில் நடைபெறும்.

1996 ஆம் ஆண்டு வரையிலான சகல வேலையற்ற பட்டதாரிகளையும் கூட்டத்துக்கு தவறாது சமுகந்தருமாறு சங்கத் தலைவர் கேட்டுள்ளார்.

1994 ஆம் ஆண்டு வரையில் கலை, விஞ்ஞானத்துறையில் பட்டம் பெற்றும், ஆசிரிய நியமனம் கிடைக்காதோர் இல. 17, பிறவுண்வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியுடன் உடனடியாக தொடர்பு கொள்ளுமாறும் கோரப்பட்டுள்ளது.

(இ-ரி)


வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.

**மீள் கேள்வி அறிவித்தல்**

01 - 08 - 1998 முதல் 31 - 12 - 1998 வரை.

**இறைச்சிக்கடை குத்தகை**

கேள்விப்பத்திரம் வழங்கல் — 1998 - 07 - 28 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணி வரை.
கேள்விப்பத்திரம் ஏற்றல் — 1998 - 07 - 29 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணி வரை.
கேள்விப்பத்திரம் திறத்தல் — 1998 - 07 - 29 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணி வரை.

| குத்தகையின் தன்மை | கடையின் மாத வாடகை | கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரப் பணம் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|---|
| மானிப்பாய் பட்டினம் | | | | |
| மாட்டிறைச்சிக் கடை ( சந்தை ) | 250/- | 1,000/- | 100/- | 41,000/- |

மேலதிக விவரங்களை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

இப் பிரதேச சபை எல்லைக்குள் எமது அனுமதியின்றி எவரும் இறைச்சி விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது.

சோ. மகாலிங்கம்,
செயலாளர்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,
மானிப்பாய்.

(சி/4278)



யா\ சங்குவேலி அ.த.க. பாடசாலை

மானிப்பாய்

**பரிசளிப்பு விழாவும் நிறுவுனர் நினைவும் - 1998**

காலம்: 15-07-1998 புதன்கிழமை
பி. ப. 1-30 மணி

இடம்: பாடசாலை மண்டபம்

தலைவர்: சண்முககுலகுமாரன் (B. A.) அதிபர்

பிரதம விருந்தினர்:
அ. தற்பரானந்தன் J. P.
(பிரதிக் கல்விப் பணிப்பாளர் உடுவில்)

சிறப்பு விருந்தினர்:
உயர்திரு. ஆறு. திருமுருகன் B. A.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பாடசாலைக் குடும்பம்

(57591)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சுகாதார அதிகாரிகள் திடீர் சோதனை**

# பாவனைக்கு உதவாத பெருமளவு பொருள்கள் சாவகச்சேரியில் மீட்பு!

தென்மராட்சி ஜூலை 15

சாவகச்சேரி நகர வர்த்தக நிலையங்கள் மீது சுகாதாரத் திணைக்கள பரிசோதகர்கள் நேற்று முன்தினம் திடீர் சோதனை நடத்தினர். இதன் போது காலாவதியான பாவனைக்கு உதவாத பெருமளவு பொருள்கள் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன.

யாழ். மாவட்ட உணவு மருந்து பரிசோதகர் த. மகாதேவன், சாவகச்சேரி பொது சுகாதாரப் பரிசோதகர் துரை கிளின்ரஸ் மற்றும் பொது சுகாதார பரிசோதகர் பயிலுநர்கள் உட்பட சுமார் 50 பேர் கொண்ட குழுவினர் ஒரே சமயத்தில் வர்த்தக நிலையங்கள் மீது இத் திடீர் பரிசோதனையை மேற்கொண்டனர்.

சோதனையின் போது காலாவதியான பிஸ்கட் வகைகள், எசென்ஸ் போத்தல்கள், 'கோல்டன் கவ்' பிஸ்கட், மாஜரீன்பைக்கற்றுகள், ரின்பால, பால்மா வகைகள், ரின்மீன் உட்பட பலபொருள்கள்விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. கைப்பற்றப்பட்ட அப் பொருள்கள் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு அழிக்கப்பட்டன.

(ஐ-117)

**பளை கல்விக் கோட்டத்தில்**

## சிறந்த பெறுபேறு பெற்ற மாணவருக்குப் பாராட்டு

பளை கல்விக்கோட்டப் பாடசாலைகளில் 1997 ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்கள், 1997 ஜி. சீ. ஈ. சாதாரணதரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகள் பெற்ற முதல் மூன்று மாணவர்கள், 1997 ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் சித்திபெற்று பல்கலைக் கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் ஆகியோரைப்பாராட்டி கௌரவித்த வைபவம் அண்மையில் பளை மத்திய கல்லூரியில் கோட்டக் கல்வி அலுவலர் அ. கைலாயபிள்ளை தலைமையில் நடைபெற்றது.

பளை கல்வி அபிவிருத்தி அவையினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த வைபவத்தில் யாழ். மாவட்ட காணிப் பதிவாளரும், மேலதிக பதிவுகாரருமாகிய ந. சதாசிவ ஐயர் மாணவர்களுக்கான பரிசில்களையும், சான்றிதழ்களையும் வழங்கினார்.

இயல் இசைவாரிதி பிரம்மஸ்ரீ வீரமணி ஐயர் சிறப்புரை வழங்கினார்.

இந்த வைபவத்தில் பளை பிரதேச சபை செயலாளர் கு. ந. பாலச்சந்திரன், பளை வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் ச. அம்பிகைபாலன், பளை ப. நோ. கூ. சங்கத் தலைவர் சி. சுந்தரலிங்கம், பளை மத்திய கல்லூரி அதிபர் க. குணபாலசிங்கம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

(இ-117)

## திருப்பணி வேலைகள்

யாழ்ப்பாணம், ஜூலை 15

ஊரெழு கண்ணகை மீனாட்சி அம்மன் ஆலய திருப்பணிவேலைகள் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சூரியகதிர் இராணுவ நடவடிக்கையின் போது பலத்த சேதமடைந்திருந்த இந்த ஆலய திருப்பணி வேலைகள் ஆலய தர்மகர்த்தா சிவஸ்ரீ கிருஷ்ணசாமிக் குருக்களின் முயற்சியால் நடைபெற்று வருகின்றன.

(இ-5)

# ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றிய பத்திரிகையாளர்

## இராஜ அரியரத்தினத்துக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம், ஜூலை 15

ஆக்க இலக்கியத்திலும் பத்திரிகைத் துறையிலும் நாட்டமில்லாத காலத்தில் அந்த இரண்டு துறைகளிலும் ஈடுபட்டு ஈழத்தமிழ் மக்களுக்குப் பெரும் சேவையாற்றியவர் அமரர் இராஜ. அரியரத்தினம். 'ஈழகேசரி' பத்திரிகை மூலம் தமிழகத்திற்கும் ஈழத்திற்கும் பாலம் அமைத்த பெருமை அவரையே சாரும். ஈழத்தில் எழுத்தாளர்கள்பலரை ஊக்குவித்து வளர்த்தவரும் அவரே. ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் அவரது பங்கு மதிப்பிடற்கரியது.

கலைப்பேரரசு ஏ. ரீ. பொன்னுத்துரை இவ்வாறு தெரிவித்தார்.

பத்திரிகையாளரும், எழுத்தாளருமான அமரர் இராஜ. அரியரத்தினத்துக்கு அஞ்சலி செலுத்துமுகமாக யாழ். இலக்கிய வட்டம் நடத்திய நினைவுக்கூட்டம் அண்மையில் 'இற்றிஹோல்' மண்டபத்தில் நடைபெற்றது. கவிஞர் கல்வயல் வே. குமாரசாமி கூட்டத்துக்குத் தலைமை வகித்தார்.

கலைப்பேரரசு ஏ. ரீ. பொன்னுத்துரை தமது அஞ்சலியுரையில் மேலும் தெரிவித்ததாவது;-

ஈழகேசரியின் நிறுவுநர் பொன்னையா மற்றும் சிவபாதசுந்தரம் ஆகிய இருவரினதும் அடித்தளத்தினின்று எழுத்துத்துறையில் வளர்ச்சி கண்டவர் அமரர் அரியரத்தினம். அவரின் ஆதரவுடன் வளர்ந்த எழுத்தாளர்கள் பலர் ஈழத்து எழுத்தாளர்களின் ஆக்கங்களைத் தமிழகத்துக்கு அறிமுகப்படுத்துவதில் பெரும் பங்காற்றியவரும் இவரே.

சுமார் நாற்பத்தைந்து வருடங்களுக்கு முன்னரே தமது முப்பத்தைந்து முதல் நாற்பது வரையான வயதில் தமிழகத்திலும் ஈழத்திலும் இரண்டுதுறைகளிலும் கொடி கட்டிப் பறந்தவர் அவர். தமிழகத்தில் நடைபெற்ற பல எழுத்தாளர் மாநாடுகளில், பத்திரிகையாளர் மாநாடுகளில் ஈழத்தின் பிரதிநிதியாகக் கலந்து கொள்ளும் வாய்ப்பு அவருக்கு இருந்தது.

ஈழத்து எழுத்தாளர்களைப் பொறுத்தவரையில், முற்போக்கு, நற்போக்கு என்ற வேறுபாடு எதுவுமின்றி திறமையுள்ள எல்லோரையும் தட்டிக்கொடுத்து, வளர்த்து ஈழத்தின் இலக்கியப் பாரம்பரியத்தை உருவாக்கிய பெருமை அமரர் இராஜ. அரியரத்தினம் அவர்களையே சாரும்-என்றார்.

கலாநிதி க. குணராசா தமது அஞ்சலி உரையில் தெரிவித்ததாவது:

ஓர் ஆக்க இலக்கியகர்த்தா பத்திரிகை ஆசிரியராகவும் சிறப்பான பணிபுரிய முடியும் என்பதை எடுத்துக் காட்டியவர் அமரர் இராஜ. அரியரத்தினம். யாழ்ப்பாணத்தில் பெரிய இலக்கிய இயக்கத்தை நடத்திய அவர் ஈழத்திற்கும் தமிழகத்திற்குமிடையில் இலக்கியப் பாலமாக விளங்கினார்.

'ஈழகேசரி' எழுத்தாளர் பரம்பரையை உருவாக்கிய அவர் பின்னர் 'ஈழநாடு' பத்திரிகை ஆசிரியராக இருந்த போதும் எழுத்தாளர்களை இனங்கண்டு அவர்களை வளர்த்தெடுப்பதில் அக்கறை காட்டினார். இளம் எழுத்தாளர்களை நேரடியாக அழைத்து அவர்களின் எழுத்துக்களையும், குறை நிறைகளையும் கூறி அவர்களுக்கு உற்சாகமூட்டி அத்துறையில் ஆர்வம் ஏற்படச் செய்த பத்திரிகையாளர் அவரே—என்றார்.

முன்னாள் அதிபர் ... கணேசலிங்கம் பேசும் போது கூறியதாவது;

தமிழகத்தால் மட்டும் தான் இலக்கியத்தை வளர்க்க முடியும் என்ற எண்ணத்தை நீக்கி இங்கிருந்தும் இலக்கியத்தை வளர்க்க முடியும் என்ற நிலையை எடுத்துக் காட்டியவர் இராஜ. அரியரத்தினம். வடக்கு—கிழக்கில் ஓர் இலக்கியப் பத்திரிகையை நடத்தலாம் என்ற நம்பிக்கையை ஐம்பது வருடங்களுக்கு முன்னரே வளர்த்தவரும் அவரே. ஆக்க இலக்கியத்தை ஈழத்தில் வளர்ப்பது குறித்து யாரும் சிந்திக்காத சூழலில் அவர் அது பற்றிச் சிந்தித்தார்.

நகைக் கடையில் தான் வைரத்தை மதிப்பிடலாம். இராஜ. அரியரத்தினத்தின் பெறுமதி தெரிந்து தான் அவரை "ஈழநாடு" பத்திரிகையாளர்கள் இணைத்துக் கொண்டார்கள்.

பத்திரிகையாளன் எழுத்தாளனுக்குரிய சிறந்த பண்புகள் அவரிடம் நிறைந்து பொலிந்தன. பத்திரிகையாளனைப் பிறர் மதிக்க வேண்டும் என்பதற்காக தமது உடை, நடை, பாவனை, பழக்க வழக்கங்களில் அதிக கவனம் செலுத்தியவர். எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள் தன்மானம் மிகுந்தவர்கள் என்பதற்கு உதாரணமாகவும் விளங்கினார்.

தாம் முற்போக்கு நற்போக்கு அணிகளுக்குள் சிக்கிக் கொள்ளாமல், இருதரப்பினருக்கும், ஊக்கமளித்து எழுத்தாளர் பரம்பரையை உருவாக்கி அந்தக் காலத்தில் ஈழத்து இலக்கிய சகாப்தத்தை உருவாக்கியவர் அவர் — என்று தெரிவித்தார்.

எழுத்தாளர்களும் இலக்கிய ஆர்வலர்களும் [illegible] பெரும் எண்ணிக்கையில் சமுகமளித்திருந்தனர்.

(அ-111-ரி)

# அஞ்சல் அலுவலகங்களில் மின் கட்டணம் செலுத்த முடியாதா?

10-07-1998 ஆம் திகதிய உதயனில் 5ஆம் பக்கத்தில் "கட்டணம் செலுத்தாவிடின் மின்சாரம் துண்டிப்பு" செய்தி தொடர்பாக இதனை எழுதுகிறேன்.

இலங்கை மின்சார சபை தனக்கு வரவேண்டிய கட்டணங்களை வங்கிகள் மூலமும், அஞ்சல் அலுவலகங்கள் மூலமும் செலுத்தவசதி செய்துள்ளது. இது பற்றிய விவரங்கள் மின்சார சபை வழங்கும் மின்பட்டியல்களில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டம் தவிர்ந்த மின்சாரம் விநியோகிக்கப்படும் இலங்கையின் அனைத்து மாவட்டங்களிலும் இவ்வசதிகள் இலங்கை மக்களுக்கு வழங்கப்படுகின்றன. ஆனால் யாழ். மாவட்ட மக்களுக்கு மட்டும் அஞ்சல் அலுவலகங்களுக்கூடாக கட்டணம் செலுத்தும் முறை செயற்படுத்தப்படவில்லை.

**வாசகர் திருமுகம்**

அஞ்சலகங்களில் இவை பற்றி விசாரித்தால்; பட்டியல்களைச் சுட்டிக் காட்டினால் "முந்தித்தான் நாங்கள் எலெக்றிக் பில் எடுத்தோம் இப்ப அது இல்லை" என்கிறார்கள்.

ஆனால் விடயமறிந்த சில அஞ்சல் அதிபர்கள் —

அஞ்சல் அலுவலகங்கள் ஊடாக (உப அஞ்சல் அலுவலகங்கள் உட்பட) கட்டணம் ஏற்கப்படலாம். ஆனால் இது தொடர்பாக ஒரு கணக்குப் புத்தகம், பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் அவர்கள் ஊடாக சகல அஞ்சல் அலுவலகங்களுக்கும் மின்சாரசபை வழங்க வேண்டும். மின்சாரசபை அப்புத்தகங்களை வழங்குமிடத்து கட்டணத்தை நாங்கள் ஏற்போம்.

இக் கணக்குப் புத்தகம் வழங்கப்பட்டால் ஒவ்வொரு அஞ்சல் அலுவலகமும் ஏற்கும் பண விவரம் மின்சார சபைக்கு அறிவிக்கப்படும் அப்போது அவற்றை சீராக்கல் தொடர்பாக மின்சார சபை கூடுதலான வேலை செய்ய வேண்டி வரும் அதனைத் தவிர்க்க வேண்டி இக் கணக்குப் புத்தகங்களை அஞ்சல், உப அஞ்சல் அலுவலகங்களுக்கு வழங்கத் தயங்குகிறது. அஞ்சல் அதிபர்களும் இவ்வாறே கடமையைக் குறைக்க அவை தொடர்பாக முயற்சி எடுக்கவில்லை இது தான் உண்மை நிலை — என்கிறார்கள்.

100 மீற்றர் தூரத்திலிருக்கும் அஞ்சலகத்தில், 5 நிமிடத்தில், மாலை 3 மணிவரை, வேறு பல அலுவல்களோடு மின்பட்டியல்களைச் செலுத்தும் வேலையை முடிக்க வேண்டிய பல மக்களைப் பல கிலோமீற்றர் தூரம் கடந்து பல வேலைகளைக் கைவிட்டு, மணித்தியாலக் கணக்கில் காத்திருந்து தங்கள் மின்பட்டியல்களை வங்கியில் செலுத்த வேண்டியுள்ளது.

காலம், நேரம், பொறுமை, பணம் என்பவற்றில் பற்றாக்குறையுள்ள எம் போன்ற மக்களுக்காக தபால் திணைக்களமும் மின்சாரசபையும் இணைந்து தென் பகுதி மக்கள் பெறும் அதே சலுகையை எமக்கும் வழங்க மாட்டார்களா?

சி. பகீரதன்

ஒட்டுமடம், யாழ்ப்பாணம்.

# நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் தனது கையை நீட்டுவது எப்போது?

மனிதனின் செயற்பாடுகள் அவன் வாழும் சூழலில் நிலவும் பழக்க வழக்கங்களால் பெருமளவிற்கு நெறிப்படுத்தப்படுகின்றன. பிரதேச வேறுபாடின்றி மக்கள் நடவடிக்கையில் ஆதிக்கம் செலுத்தும் பழக்கங்கள் சிலவுண்டு; அவற்றுள் புகைத்தலும் ஒன்று.

களைப்புற்ற உடலுக்கு புத்துணர்ச்சி அளிக்கின்றது. அதனூடாக உற்பத்தித்திறன் அதிகரிக்கின்றது. இந்தக் கருத்து ஒரு வகையில் அனேகரால் ஒப்புக்கொள்ளப்பட்டபோதிலும், புகைத்தல் நீண்ட காலத்தில் ஆரோக்கியத்திற்குக் கேடு விளைவிக்கும் என்பதனை மறந்துவிடலாகாது. இது குறித்த எச்சரிக்கை எல்லாத் தொடர்பு சாதனங்களூடாகவும் விடப்பட்டும் மக்கள் புகைத்தலைக் கைவிட்டதாகத் தெரியவில்லை.

இத்தகைய ஒரு சூழ்நிலையில் எமது பிரதேசத்தில் சிகரெட் புகைப்போரின் நிலை என்ன?

காலத்திற்குக் காலம் விநியோகத்தில் ஏற்பட்ட தடங்கல்களால் சிகரெட்டின் விலை மிகவும் உயர்ந்துள்ளது. அதனால் புகைப்போர் பாதிக்கப்பட்டுள்ளனர்,

இப்போது தட்டுப்பாடு அல்லது பற்றாக்குறை என்று சொல்ல முடியாதவாறு சிகரெட் போதிய அளவு சந்தைக்கு வந்துள்ளது.

மேலும், கொழும்பு விலைக்கே சிகரெட் வகைகள் இங்குள்ள விற்பனை நிலையங்களுக்கு விநியோகிக்கப்படுகின்றன. ஏனைய பாவனைப் பொருள்கள் போலன்றி கப்பற் கட்டணத்தை உற்பத்தி நிறுவனமே ஏற்றுள்ளது.

ஆனால் இந்த நன்மை பாவனையாளர்களை வந்தடையவில்லை. அதனால் நாம் அதிக விலை கொடுத்தே இன்னமும் சிகரெட் வாங்குகிறோம்.

தனி சிகரெட்டின் விலை பின்வருமாறு அறிவிக்கப்பட்டிருந்தது:

பிறிஸ்டல் — 4 ரூபா, கோல்ட்லீவ் — 4 ரூபா ஐம்பது சதம், கப்ஸ்ரன் — 1 ரூபா 50 சதம்.

ஆனால் சிலவர்த்தகர்கள் உரிய விலையில் பாவனையாளருக்கு சிகரெட்டை வழங்காமல் கூடியலாபம் பெறுவது கவலைக்குரிய விடயம்.

சட்டத்தை மீறி செல்வம் சேர்ப்பவர்களுக்கு இயற்கை வழங்கும் தண்டனை எத்தகையது என்பதனை வள்ளுவர்—

களவினாலாகிய ஆக்கம்
அளவறந்து ஆவதுபோல் கெடும் — என்கிறார்.

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் வர்த்தகர்களை நோக்கித்தனது கரங்களை நீட்டாது இருப்பது ஏன்? இதற்கு யார் பொறுப்பு?

இ. சிவராமன்

வட்டுக்கோட்டை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## சிவாச்சார்ய அபிஷேக அழைப்பு

ஸ்வஸ்திஸ்ரீ நிகழும் ஆனி மாதம் 32 ஆம் நாள் (16-07-98) வியாழக்கிழமை காலை 8-00 மணி முதல் 9-00 மணி வரையுள்ள ரேவதி நட்சத்திரமும் சித்தாமிர்த யோகமும் கூடிய சிங்க லக்கின சுப முகூர்த்தத்தில்

எனது த்விதீய குமாரன்
சிரஞ்சீவி
**ரவிச்சந்திர சர்மாவுக்கு**


விசேட தீட்சா நிர்வாண தீட்சா ஆச்சார்யாபிஷேகம் வெளிவயல் ஸ்ரீ முத்துமாரி அம்பாள் திருவருள் துணை கொண்டு நடைபெறத் திருவருள் கைகூடி இருப்பதால் ஆலயத்தில் நடைபெறும் இவ்வைபவத்திற்கு தாங்கள் குடும்ப சமேதரராக வந்திருந்து ஆசி நல்கும் வண்ணம் அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

தீட்சா குரு:
**சிவஸ்ரீ தா. மகாதேவக் குருக்கள்**
காயத்திரி பீடம்

இங்ஙனம்
தங்கள் நல்வரவை நாடும்
பிரம்மஸ்ரீ தி. செந்தில்நாத சர்மா
தம்பதிகள்.

வெளிவயல் முத்துமாரி
அம்பாள் தேவஸ்தானம்,
அளவெட்டி தெற்கு. (சி-4271)

## 7 ஆம் ஆண்டு நினைவலைகள்



**நெல்லை க. பேரன் குடும்பத்தினர்**

மறைவு 15 — 07 — 1991

ஆண்டுகள் ஏழு ஆகியதோ?
ஈரவிழி ஆறவில்லை!

தகவல்:
க. பாலேந்திரன்

முருகமூர்த்தி கோயிலடி,
நெல்லியடி,
கரவெட்டி. (சி/4265)

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 22 — 11 — 1938

மறைவு 29 — 06 — 1994

**அமரர் இ. இராமச்சந்திரன்**
(ELECTRICAL FOREMAN)
திதி: 15 - 07 - 1998

எங்கள் நெஞ்சில் எந்நாளும்
இருக்கும் ஐயா, இதயத்தில்
பொங்கும் துயரம் கொள வைத்துப்
போனதேனோ? உயிர் ஊனில்
தங்கு மட்டுமே யன்றிச்
சாவிற் கூட மறவோமே
திங்கள் சூடும் சிவனார்தம்
திருப் பாதத்தே வாழ்வாயே!

பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள், உறவினர்கள்.

359/34A கோயில் வீதி,
நல்லூர். (57528)

## மனநோயாளி சிறுமியை தாக்கினார்

மனநோயாளி எனக் கூறப்படும் பெண் ஒருவர் 3 வயது சிறுமியைக் கத்தியால் பல தடவை வெட்டியதால் சிறுமி முகத்திலும், காதிலும் காயமடைந்தார்.

சாவகச்சேரி, சச்சாய்வீதிப் பகுதியில் கடந்த சில நாள்களுக்கு முன் இடம்பெற்ற இச் சம்பவத்தில் மகேந்திரராசா நிர்மலா (வயது 3) என்ற சிறுமியே காயமடைந்தவராவார். காயமடைந்தவர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டுள்ளார்.

சிறுமியின் முகத்திலும், காதிலும் நான்கு தடவைகள் வெட்டப்பட்டுள்ளன. இவரது கண் மயிரிழையில் தப்பியுள்ளது. (ஐ-15)

## கோயில் வீதியில் பணிமனை

அரியாலை, ஜூலை 15

யாழ். மாவட்ட கூட்டுறவு கிராமிய வங்கிகளின் சமாச அலுவலக பணிமனை யாழ். கோயில் வீதிப் பகுதியில் திறந்துவைக்கப் பட்டுள்ளது.

சமாசத்தலைவர் சீ.வி.கே. சிவஞானம் தலைமையில் இந்த வைபவம் நடைபெற்றது.

புதிய அலுவலகத்தை யாழ். அரசாங்க அதிபர் கே. சண்முகநாதன் திறந்து வைத்தார்,

திறப்பு விழாவில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், யாழ். பிரதேச செயலர் உட்பட பலநோக்கு கூட்டுறவுச்சங்க தலைவர்கள் இயக்குநர் சபை உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-17)


## தேவை

எமது ஸ்தாபனத்துக்கு அனுபவம் உள்ள சுவீற்ஸ் மேக்கர் தேவை.

உடன் தொடர்பு கொள்ளவும்:

**லிங்கன் கிறீம் ஹவுஸ்**
119, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (57588)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## வெளிவாரி பதிவுகள் பரீட்சைகள் அலகு.

வெளிவாரிப் பரீட்சைகள்
கல்வியாண்டு 1997

கீழே தரப்பட்ட பரீட்சைகள் 1998 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 1 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

முதற் கலைத் தேர்வு - 1997
முதல் வர்த்தகத் தேர்வு - 1997

இப்பரீட்சைக்கு விண்ணப்பித்த பரீட்சார்த்திகள் தமது அனுமதி அட்டைகளை வெளிவாரிப் பதிவுகள் அலகில், அலுவலக நேரத்தில் 25-7-98 ஆம் திகதி முதல் பெற்றுக் கொள்ளலாம்.

- பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். [சி/4273]

## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 06 - 03 - 1949
மறைவு: 26 - 06 - 1997

திருமதி
**புவனேஸ்வரன் கமலாம்பாள் (பேபி)**
திதி: 15 - 07 - 1998

ஆண்டு ஒன்று ஆயிடினும் பாசமது மாறாது—உங்கள் நினைவுகளும் மாறாது!

உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
கணவர், பிள்ளைகள், சகோதரர்,
உற்றார், உறவினர்.

''புஸ்ப பவனம்''
நெல்லியடி, கரவெட்டி. (57586)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



மண்ணில் 15 — 02 — 1930

விண்ணில் 16 — 06 — 1998

திருமதி
**சங்கரப்பிள்ளை இலட்சுமிப்பிள்ளை**

துன்னாலை மத்தி கரவெட்டியைச் சேர்ந்த திருமதி சங்கரப்பிள்ளை இலட்சுமிப்பிள்ளை அவர்களின் 31ஆம்நாள் சபிண்டீகரணக் கிரியைகள் 16-07-98 வியாழக்கிழமையன்று எமது இல்லத்தில் நிகழவுள்ளன.

அன்றைய தினம் நிகழும் சபிண்டீகரணக் கிரியைகளிலும் (காலை) மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

- குடும்பத்தினர்

ந. சிவராசா,
துன்னாலை மத்தி,
கரவெட்டி (சி/ 4266)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் சி. திருநாவுக்கரசு**

தோற்றம் 10 — 09 — 1934
மறைவு 27 — 06 — 1997

திதி: 15 — 07 — 1998

அன்புதனை அருவியாக்கி பண்புதனைச் சிகரமாக்கி மக்கள் அறுவரை நல்வாழ்வு வாழவைத்த ஐயாவே!

வருடம் ஒன்று சென்றிடினும் மறந்திடுமோ உங்கள் அன்பு முகம்?

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கும்
-குடும்பத்தினர்

தகவல்;
கலாதுஷியந்தன் (மகள்)
ஐயனார் வீதி,
பருத்தித்துறை. (57547)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## இரண்டாவது அடி இது!

யாழ்ப்பாணத்து மக்களுக்கு அரசாங்கம் மற்றொரு பலத்த அடி போட்டுள்ளது. இப்போது ஏதோ சிறிய அளவிலாவது நடைபெறும் புனர்வாழ்வுப் பணிகளை இல்லாமற் தடுத்துவிடும் ''தடை'' நடவடிக்கையே அதுவாகும்.

யாழ்ப்பாண மக்கள் பெரும் இடம் பெயர்வு ஒன்றுக்கு ஆளாகிய பின்னர், குடா நாட்டில், மீளக்குடியமர்ந்து இரண்டேகால் வருடங்கள் ஆகின்றன, ஆனால், அரசு இதுவரை மேற்கொண்ட. புனர்வாழ்வுத் திட்டங்கள் அல்லது நடவடிக்கைகள் விரல் விட்டு எண்ணக் கூடியவையே. வடக்கு புனர்நிர்மாணபுனர்வாழ்வு அதிகார சபைத் திட்டங்களை வகுத்து அறிவிப்பதனை இல்லை என்று சொல்ல முன் வரவில்லை. ஆனால் அவற்றுக்குரிய நிதி ஒதுக்கீடும், செயலாக்கமும் மந்த கதியிலேயே நகர்கின்றன.

அரசின் புனர்வாழ்வுத் திட்ட நடவடிக்கைகளுடன் அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் ஆற்றும் புனர் வாழ்வுப் பணிகளை ஒப்பிட்டால் பிந்தியவையே மிகக் கணிசமானவை.

குடாநாட்டில் இயங்கும் உள்நாட்டு, வெளிநாட்டுத் தொண்டர் நிறுவனங்கள் மீளக்குடியமர்ந்த மக்கள் இழந்த பல அத்தியாவசியத் தேவைகளை மிக வேகமாக நிறைவேற்றி வருகின்றன.

இது அரசுக்குப் பொறுக்கவில்லையா?

யாழ்ப்பாண மாவட்டத்தில் புனர்வாழ்வுப் பணிகளைச் செய்து வரும்அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள்பாதுகாப்புஅமைச்சின் அனுமதியைப் பெறாமல், இனிமேல் யாழ். மக்களுக்கு உதவி செய்ய முடியாது, சேவையாற்ற முடியாது.

இப்போது யாழ்ப்பாணத்தில் சிவில்நிர்வாகம் நடைபெறுகின்றது. அதாவது 1990 முதல் 1995 வரை அரசின் ஆணை செல்லுபடியாகாமல்இருந்த நிலை இப்போதில்லை. ஆனால் கொழும்பிலிருந்து எந்தப் பொருளைக் [உதாரணத்துக்குக் கதிரை] கொண்டு வருவதானாலும் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெற்றாக வேண்டும்!

இதன் அர்த்தம்—

மக்கள் தங்களுக்குத் தேவையான பாவனைப் பொருள்களுக்குப் பதிலாக அல்லது அவற்றுடன் சேர்த்து ஆயுதங்களை அல்லது குண்டுகளைக் கொண்டு வந்து சேர்த்து விடுவார்கள் என்று அரசு சந்தேகப்படுகிறது என்பதேயாகும்.

ஆகையால் குடா நாட்டில் மக்களின் புனர்வாழ்வுப் பணிகளில் அக்கறையுடன் செயற்படும் அரச சார்பற்ற நிறுவனங்கள் மீது அரசுசந்தேகம்கொள்ளாது இருக்கும் என்று எதிர்பார்க்க முடியாது தான்...!

பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெற்றே தொண்டர்நிறுவனங்கள்புனர்வாழ்வுப் பணிகளைச் செய்யலாம் என்ற இந்தத் 'தடை' அவற்றை இங்கிருந்து துரத்திவிடும் மறைமுக நடவடிக்கையுமாகும்.

நிவாரண நிறுத்தத்தின் பின்னர் அரசு யாழ்ப்பாண மக்களுக்குப்போடும் இரண்டாவது அடி இது!

# ஆசிரிய நியமனம் பெறும் மேலும் 197 பட்டதாரி பயிலுநர்கள் விவரம்

யாழ்ப்பாணம், ஜூலை 15

கல்வி வலயம் இரண்டின் கீழ் உள்ள பாடசாலைகளில் புதிதாக 197 பட்டதாரிப் பயிலுநர்கள் இன்று புதன் கிழமை முதல் நியமிக்கப் படவுள்ளனர்.

இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் இன்று காலை 9 மணிக்கு கோப்பாயில் உள்ள கல்வி வலயம் இரண்டின் அலுவலகத்தில் கல்விப் பணிப்பாளர் எஸ்.சிவராசாவினால் வழங்கப்படவுள்ளன.

பட்டதாரிப்பயிலுநர்களாக நியமிக்கப்படுபவர்களுக்கு மாதம் 2 ஆயிரத்து 500 ரூபா சம்பளம் வழங்கப் படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்றைய உதயனில் கல்வி வலயம் ஒன்றின் கீழ் உள்ள பாடசாலைகளில் நியமனம்பெறும் 143 பேரின் பெயர் விவரங்கள் வெளியாகியிருந்தன.

இன்று கல்விவலயம் இரண்டின் கீழ் உள்ள பாடசாலைகளில் நியமனம் பெறுவோரின் பெயர் விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

நியமனம் பெறுவோரின் பெயர் விவரம்வருமாறு:

எஸ். கதிரமலை (பருத்தித்துறை), எஸ். வரதலட்சுமி (அச்சுவேலி), எஸ். பரந்தாமன் (அச்சுவேலி), பிறின்சஸ்மேரி தேவதர் ((புலோலி), கே. ஜெயந்தி (கரவெட்டி), பி. சிவகுமார் (நல்லூர்), பி. ஜெயந்தினி (கொழும்பு06), எஸ். கருணா (திருகோணமலை), எஸ். ஷாதனா (தெகிவளை).

எஸ். கயல்விழி (கிருலப்பனை), எஸ். அனுசியா (பருத்தித்துறை). எஸ். சரத்சந்திரன் (மானிப்பாய்), கே. வாசுகி (தாவடி), எஸ். உமாசாந்தி (கொழும்பு 06) கே. விஜயகுமாரி (பருத்தித்துறை), ஆர். சாந்தி (சுழிபுரம்), ஈ. அன்னிபியிலிசியா (மல்லாகம்), வி. சேந்தன் (திருநெல்வேலி),

பி. சற்குணநாதன் (வவுனியா), வி. கார்த்திகேயன் (தெகிவளை), எஸ். சாந்தினி [கரவெட்டி], எஸ். ஜெயதேவி [கொழும்பு 06], என். ஜமுனா ஜெயநந்தினி ]கொழும்பு 11], எம். மனோறாஜினி [சுன்னாகம்], பி. அரவிந்தன் [பருத்தித்துறை]

எம். ஞானசோதி [கொழும்பு], பி. வாசுகி [கரவெட்டி], கே. செந்தில்குமரன் [அச்சுவேலி.]

ஆர். கௌரி (புலோலி) வி. வத்சலா (கொழும்பு), எம்.சி.பி. சுரேஜினி (யாழ்ப்பாணம்), என். விஜயவாணி (கரவெட்டி), ரி. சுமதி (அல்வாய்), வி. மைதிலி (கரவெட்டி), கே. ஜெயந்தா (மானிப்பாய்), கே. பானு (கொக்குவில்), ஆர். றஞ்சித்குமார் (கொழும்பு 06)

ரி. அன்பழகன் (பருத்தித்துறை), எ. யோகேஸ்வரன் (அளவெட்டி), ஜி. ஆர். கோகுலறங்கன் (யாழ்ப்பாணம்), எஸ். கெங்காதேவி (பருத்தித்துறை), எஸ்.சீதாதேவி (கொக்குவில்), எம். கேமலதா (சண்டிலிப்பாய்), எஸ். கௌசல்யா (நீர்வேலி), கே. அமிர்தரஞ்சினி (திருநெல்வேலி)

கே. வசந்தராணி (முல்லைத்தீவு), கே. சிவகரன் (மட்டக்களப்பு), கே. புவனேஸ்வரி (தொட்டிலடி), வி. என். ரமணதேவி (வடமராட்சி வடக்கு-கிழக்கு), எஸ். சிறீகுமாரி (கோப்பாய், ரி. புஸ்பகாந்தி (மல்லாவி), ஆர். கௌசலாதேவி (கொட்டேனா)

என். நவதர்ஷினி (நல்லூர்), எஸ். தேவேஸ்வரி (கொக்குவில்), கே.கீதாமணி (அல்வாய்), மீ. அருள்நேசராணி(மானிப்பாய்), ஜே. றெஜினி மரியா பவளம் (சுன்னாகம்), ரீ. சிவசுப்பிரமணியம்(சுன்னாகம்), ரீ. சத்தியபாமா (கல்கிசை), கே. தேனுகா(சாவகச்சேரி), வீ. யசோதினி (கொழும்பு-04), ஆர். சௌந்தமரியாமலர் (பருத்தித்துறை), எஸ். தனேஸ்வரி (கரவெட்டி), ஜே.வனிதா(மகரகம), என். மங்கவேஸ்வரி(மானிப்பாய்), கே. அருள்வதி(ஏழாலை).

எஸ். சத்யதவம் (கோப்பாய்), எம். தனுநாதசர்மா (சுன்னாகம்), எஸ். சிவசக்தி (பருத்தித்துறை), ஆர். விமதீஸ்வரி(பருத்தித்துறை), எஸ். தவராணி (நல்லூர்). எம். சரவணபவன் (இணுவில்), என். ஜசந்தா(மானிப்பாய்), ஏ. ராதா (கொக்குவில்).

எஸ். ஜனார்த்தனன்(காங்கேசன்துறை), கே. குமுதினி (கரவெட்டி), பி. சுதர்சினி (கொழும்பு-03), ரீ. அருள்மொழி (சுன்னாகம்), வை. பிரதாஜினி (கந்தரோடை), எஸ். பத்மராணி (சுன்னாகம்), வீ. ரஜனி (புலோலி), எஸ். தனேஸ்வரி (ஏழாலை), வீ. தமிழ்ச்செல்வி(வல்வெட்டித்துறை), ஆர். ஸ்ரீரஞ்ஜினி(கண்டி).

சீ. ஜி. திருமாலழகன் (கரவெட்டி), எம். மாதினி (கரவெட்டி), எஸ். வத்சலா (சுன்னாகம்), ரீ. ஜெயவதனா (கரவெட்டி), கே. பிரதீபா (கொழும்பு), ஆர். சுகுணா (சுன்னாகம்), வீ. ஞானவாணி (அளவெட்டி), எம். ராஜினி (மாகியப்பிட்டி), என்.சிதரா (கரவெட்டி), கே. விஜயஸ்ரீ (நல்லூர்),

எஸ். சிவசுப்பிரமணியம் (கோப்பாய்), எஸ். தனலக்சுமி(கரவெட்டி), பி. சீதா (வவுனியா), ஆர். ராஜவினோதினி (கோப்பாய்), எஸ். ஜெனனி (நல்லூர்), வீ. கோகிலராணி (வட்டுக்கோட்டை), கே. புவனேஸ்வரி (உரும்பிராய்), டபிள்யூ. ரஞ்ஜினி (சுன்னாகம்), சீ. பாலச்சந்திரன் (யாழ்ப்பாணம்), சத்தியதேவி (கோப்பாய்),

எஸ். ராஜநங்கை (முள்ளியவளை), சீ. ஜெயந்தி (கொழும்பு-06), வீ. நிமாலினி, (வட்டுக்கோட்டை), ஜி. எப். பி. சுரேஸ்வரன் (ஹனுப்பிட்டிய), பி. சுகிதா (நல்லூர்), எஸ். காயத்திரி (வட்டுக்கோட்டை), கே. சேவியரைமனை (கரணவாய்), ஆர். கலைவாணி (சுன்னாகம்), எஸ். பத்மலோசினி (வயாவிளான்),

எஸ். மங்களேஸ்வரி (தும்பளை), வீ. ரி. கமலாம்பிகை (கரவெட்டி).

எஸ். மலர்விழி (வல்வெட்டித்துறை), எஸ். லலிதா [வவுனியா], ரீ. சிவச்சந்திரா (சுன்னாகம்). பி. சாரதா [சுழிபுரம்] ரீ. பத்மாவதி (வல்வெட்டித்துறை), கே. புவனேஸ்வரி (கரவெட்டி) ஈ. பேனாட் மகேந்திரன் (சுன்னாகம்).

ஏ. தவகுமாரன் (மானிப்பாய்), எஸ். பாலசரஸ்வதி (கரவெட்டி) வி. விக்னேஸ்வரன்(பருத்தித்துறை), எஸ். மனோகரன் (வல்வெட்டித்துறை), ஏ.ஏ.சி. கிறிஸ்ரோபர் (கோப்பாய்), ஏ. ஜோசேப் (பருத்தித்துறை),

ஆர். ஜெகதாசன் (விசுவமடு), எஸ். நந்தினி(உடுவில்), கே. விஜயதேவன் (கோப்பாய்), கே. தாரகா (பருத்தித்துறை), கே. சுதாகரன் புலோலி) ரி. மாதுமை (கல்(வளை).

எஸ். சண்முகப்பிரியா (உரும்பிராய்), ஏ. அருளீசன் (அச்சுவேலி), ரி. ரமேஸ்(சண்டிலிப்பாய்), எஸ். ரவிச்சந்திரன் (கோப்பாய்).

இ.கே. ஜோன்சன் (கோண்டாவில்), எஸ். பாமகுமாரி (வடமராட்சி கிழக்கு), கே. சுசீலராணி (கரவெட்டி).

ஏ.எஸ். குகநேசன்(வதிரி), கே. யாழினி (தெல்லிப்பளை), என். வசந்தினி(சண்டிலிப்பாய்).

எல். சிவமதி (கரவெட்டி), கே. கமலாவதி (கோப்பாய்), என். புரட்சிதாசன் (கரவெட்டி), எஸ். நித்தியானந்தன் (சண்டிலிப்பாய்), ஜே. ரி. ஞானேசன் (பருத்தித்துறை), எஸ். செல்வானந்தி (கொக்குவில்).

கே. யோகராஜா (உடுப்பிட்டி), ஆர். விஜயாநந்தி (கோப்பாய்), எஸ். ஞானாம்பிகை (சுழிபுரம்), எஸ். செல்வகுமார் (சுன்னாகம்), எஸ். செந்தில்ராஜ் (கோப்பாய்), ஏ. வாசவன் (உரும்பிராய்)

கே. மனோகரன்(பருத்தித்துறை), எஸ். கோகிலச்செல்வன்(அச்சுவேலி), எஸ். சிவலோகநாதன்). (பருத்தித்துறை), ஏ. தயாபரன் (தெல்லிப்பழை), எம். ரமேஸ் (சங்கானை), ஆர். சுதா(வல்வெட்டித்துறை).

ரி. பிறேமச்சந்திரன் (நெல்லியடி), கே. வசந்தி (தம்பசிட்டி), ஆர். கிருபாகரி (புலோலி), ஜி. ஐங்கரன் (இணுவில்), எஸ். நந்தினி (அச்சுவேலி), ரி. றைசா (உடுவில்).

எஸ். மகேந்திரன் (கரவெட்டி), ஏ. கீதாஞ்சலி (உடுவில்), ரி. நிலாவரசி (மல்லாகம்), எஸ். மனோகரி (கரவெட்டி), கே. ஜெயரூபன் (வல்வெட்டி), பி. பவானந்தி (கோப்பாய்).

கே. தாரணி (சண்டிலிப்பாய்), எம். கருணாநிதி (சங்கானை), வி. சிவாஜினி (இணுவில்), ரி, மதியழகன் (பருத்தித்துறை), பி. நந்தினி (பருத்தித்துறை), ஆர். வளர்மதி (இணுவில்).

எல். பிரதீபன்(சுதுமலை), எஸ். தில்லைநாதன் (பருத்தித்துறை), ரி. நித்யகலா (உரும்பிராய்), எஸ். சிவயோகராஜா (நவிண்டில்), வி. லிங்கேஸ்வரன் (கோப்பாய்), ஆர். சடாசராஜ் (தாவடி), கே. காந்திமதி (கோப்பாய்), எஸ். கலாஜினி (மானிப்பாய்), கே. புவனேஸ்வரி (கரவெட்டி), கே. சந்திரிகா (கோப்பாய்), என். ராஜகுமாரன் (மானிப்பாய்), ஏ. எம். சி. மகேந்திரன் (பருத்தித்துறை), எஸ். கனகலிங்கம் (அல்வாய்) எம். மதிவதனி (கொழும்பு)

(இ-7-ரி)

### நாளை

ஆனி - 32

வியாழக்கிழமை

திதி: ஸப்தமி முற்பகல் 10.49வரை

நட்சத்திரம்: ரேவதி முன்இரவு 09.51 வரை

சுபநேரம் 07.30 - 09.00

ராகுகாலம்: 01.30 - 3.00

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### உதயவாக்கு

வாழ்தல் என்பதன் பொருளை நாம் அறியாத [illegible]

-ஜே. கிருஷ்ணமூர்த்தி.

## வெளி நோயாளர் சிகிச்சை நாள்களை அதிகரிக்குக

### கி. அ. சங்கம் கோரிக்கை

பண்டத்தரிப்பு அரசினர் வைத்தியசாலையில் வாரம் இரு நாள்கள் மட்டும் நடைபெற்று வரும் வெளி நோயாளர்களுக்கான வைத்திய சேவை வாரம் மூன்று நாள்கள் நடைபெற ஒழுங்கு செய்யப்பட வேண்டும்.

இப்படி பண்டத்தரிப்பு கிராம அபிவிருத்திச் சங்கம் யாழ். சுகாதார சேவைபிரதி மாகாணப் பணிப்பாளரை தீர்மானம் ஒன்றின் மூலம் கேட்டுள்ளது.

தற்போது தொல்புரம் அரசினர் வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி வாரத்தில் இரு நாள்கள் மட்டுமே இங்கு வந்து சிகிச்சைகளை மேற்கொண்டு வருகின்றார்.

பண்டத்தரிப்பு, சில்லாலை, வடலியடைப்பு, பிரான்பற்று, மாதகல் ஆகிய இடங்களைச் சேர்ந்த மக்கள் வைத்திய சிகிச்சை பெறுவதற்கு இந்த வைத்திய சாலையையே நாடி வருகின்றார்கள். நிரந்தர வைத்திய அதிகாரி ஒருவரை நியமிக்கும் வரை இங்கு வாரம் மூன்று நாள்கள் வைத்திய சிகிச்சை நடத்துவதற்கு ஏற்பாடு செய்து தரப்படவேண்டும்.

இப்படி தீர்மானத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது,

சங்கத் தலைவர் ஏ. வி. துரையப்பா தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

(இ-135)

## ஆஸ்பத்திரி ஊழியர் வேலை நிறுத்தம்

பாணந்துறை ஆஸ்பத்திரியைச் சேர்ந்த 550 ஊழியர்கள் நேற்றுமுன்தினம் அடையாள வேலைநிறுத்தம் செய்தனர்.

பாணந்துறை ஆஸ்பத்திரியில் நடந்த தாக்குதற் சம்பவம் ஒன்றையடுத்து, தமக்கு பாதுகாப்பு வழங்கக்கோரி டாக்டர்கள், தாதியர், ஊழியர்களே வேலை நிறுத்தத்தில் குதித்தனர்.

இத் தாக்குதல் தொடர்பாக நோயாளி ஒருவரையும் மற்றொருவரையும் பொலீஸார் கைது செய்தனர்.

(இ-3)

## கண்காட்சி

தென்னிந்தியத் திருச்சபையால் நடத்தப்பட்டுவரும் இணுவில் தொழில்நுட்பக் கல்லூரி இறுதியாண்டு மாணவர்கள் ஒழுங்கு செய்துள்ள மனைப்பொருளியல் கண்காட்சி நாளை வியாழக்கிழமை காலை 9 மணிமுதல் மாலை 4மணிவரை இணுவில் மைக்கிலியட் வைத்தியசாலை மண்டபத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வை இணுவில் தொழில்நுட்பக் கல்லூரி முகாமையாளர் எஸ். மித்திரரஞ்சன் ஆரம்பித்து வைப்பார்.

(இ-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்திக் கொத்து

## தேங்காய் விலை உயர்வு

யாழ்ப்பாணம், ஜூலை 15

வடமராட்சி பருத்தித்துறைப் பகுதியில் தேங்காயின் விலை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

கடந்த வாரத்தில் 7ரூபா 8ரூபா வாகவிற்றதேங்காய் தற்போது 17, 18ரூபா வரையில் விற்கப்படுகின்றது. (இ-15-9)

## கோழிகள் திருட்டு அதிகரிப்பு

கொழும்புத்துறை, ஜூலை 15

சுண்டுக்குளிப் பகுதியில் கோழித்திருட்டு அதிகரித்துவருவதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வாரம் சுமார் 140கோழிகள் வரையில் திருடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (இ-30-9)

## வீதி திருத்தம்

நெல்லியடி, ஜூலை 15

பல வருட காலமாகச் சேதமடைந்திருந்த வல்லைச் சந்தி – தொண்டமானாறு வீதியைத் திருத்துவதற்கான நடவடிக்கைகளை வீதி, அபிவிருத்தித் திணைக்களம் மேற்கொண்டுள்ளது. (இ-109)

## ஆங்கில தின விழா

இளவாலை, ஜூலை 15

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் ஆங்கில தினவிழா அண்மையில் செல்வன் ஏ.லேகோற் தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் திருமதி றெ: இருதயநாதன் ஆங்கில தினப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கினார். (இ-48)

## ஓவியக் கண்காட்சி

நல்லூர் ஜூலை 15

வடக்கு –கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு பாடசாலைகளுக்கிடையே மாணவர்களின் ஓவியக் கண்காட்சியை நடத்தவுள்ளது. இம் மாத இறுதியில் மேற்படி கண்காட்சி நடைபெறும் எனத் தெரியவந்துள்ளது. (இ-103)

## திருமுறைப் படிப்பு

சுழிபுரம், ஜூலை 15

பண்ணாகம் ஆலடி வைரவப்பெருமான் ஆலய கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து நாளை வியாழக்கிழமை முதல் தினமும் முற்பகல் 10 மணி முதல் பிற்பகல் 1.30 மணி வரை பன்னிரு திருமுறைப்படிப்பு நடைபெறவுள்ளது. திருத்தொண்டர் ந. சிவரஞ்சன் படிப்பை ஆரம்பித்து வைப்பார். தினமும் சி. வெற்றிவேலு தலைமையில் படிப்பு நடைபெறும். (இ-28)

## கிணறுகள் சுத்திகரிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை15

மீளக்குடியேறிய கிராமங்களிலுள்ள 10 ஆயிரம் குடும்பங்களுக்கு குடிதண்ணீர் வழங்கும் திட்டத்தின் கீழ் உள்ளூராட்சி திணைக்களத்தினால் இனம் காணப்பட்ட 7 பிரதேச சபைகளிலும் கிணறுசுத்திகரிப்பு வேலைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்துக்கென முதற் கட்டமாக 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா வரையில் செலவு செய்யப்பட்டுள்ளது. (இ-5-6)

## குளோரின் விநியோகம்

நெல்லியடி, ஜூலை 15

வலி–கிழக்கு பிரதேச சபையின் கீழுள்ள பகுதிகளுக்கு அரச சார்பற்ற நிறுவனத்தினால் அண்மையில் குளோரின் வழங்கப்பட்டுள்ளது.

அச்சுவேலி, ஆவரங்கால், புத்தூர்ப் பகுதிகளிலுள்ள பொதுக் கிணறுகளுக்கும், வீடுகளிலுள்ள கிணறுகளுக்கும் குளோரின் இடப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-109)

## புனரமைப்பு

திருநெல்வேலி ஜூலை 15

யாழ். இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தின் பார்வையாளர் அரங்க கட்டடம் கல்லூரியின் பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினால் புனரமைப்புச்செய்யப்பட்டுள்ளது.

இம் மைதானத்தில் சேதமடைந்த நிலையிலிருந்த மலசல கூடமும் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. (இ-135)

## கௌரவிப்பு

வலி. தெற்கு, ஜூலை 15

சண்டிலிப்பாய்கல்வளை பிள்ளையார் ஆலயத்தில் நடைபெற்ற மஹோற்சவ விழாக்காலங்களில் 11 நாள்கள் தொடர் சொற்பொழிவாற்றிய சண்டிலிப்பாய் இந்து மகாவித்தியாலய ஆசிரியர் சைவப் புலவர் கந்தசத்தியதாசன் அவர்களை ஆலய நிர்வாக சபைசார்பில் காரைநகர் சிவஸ்ரீ கு: கணேஸ்வரக் குருக்கள் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார். (இ-152)

## 2 ஆம் தவணைப் பரீட்சை

வலி. தெற்கு, ஜூலை 15

உடுவில் கல்விக்கோட்ட பாடசாலைகளுக்கான இரண்டாம் தவணைப் பரீட்சைகள் இம்மாதம் 22 ஆம் திகதி ஆரம்பமாகும் என உடுவில் கல்விக் கோட்டக் கல்வி அதிகாரி அ. தற்பரானந்தன் பாடசாலை அதிபர்களுக்கு அறிவித்துள்ளார்.

தரம் 11 சீடா கல்வி அபிவிருத்தித் திட்டத்தில் உள்ள பாடசாலைகளும் தரம்1—5வரை உள்ள யூனிசெவ் திட்டத்தில் உள்ள பாடசாலைகளும் இப் பரீட்சைக்குத் தோற்றக் கூடியதாக பரீட்சை நேரசூசி தயாரிக்கப்பட்டுள்ளது எனவும் கல்வி அதிகாரி தெரிவித்துள்ளார். (இ-152)

## போரூட் உதவி

வலிகாமம் தெற்கு, ஜூலை 15

யாழ்ப்பாண மாவட்டத்தில் மக்கள் மீளக்குடியமர்ந்துள்ள பகுதிகளில் போரூட் நிறுவனத்தினால் பொதுக்கிணறுகள் அமைத்தல், சிறுசிறு வீடுகள் அமைத்தல் போன்ற வேலைகளும், சேதத்துக்குள்ளாகிய பாடசாலைகளைத் திருத்தி அமைக்கும் வேலைகளும் மேற்கொள்ளப்பட உள்ளன. (இ-152)

## தொண்டர் ஆசிரியர் பொதுக் கூட்டம்

யாழ். மாவட்ட தொண்டர் ஆசிரியர் சங்கத்தின் நிர்வாக சபையை தெரிவு செய்வதற்கான பொதுக் கூட்டம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு டி. எம். ஐ. கல்வி நிறுவனத்தில் நடை பெறவுள்ளது. (ஐ-ரி)

# கர்ப்பிணிப் பெண் ஒருவர் படகில் குழந்தை பிரசவம்

## அனலைதீவில் வைத்திய அதிகாரி இல்லை

நெடுந்தீவு, ஜூலை 15

அனலைதீவில் இருந்து ஊர்காவற்றுறைக்கு வந்து கொண்டிருந்த படகில் பயணம் செய்த பெண் ஒருவர் ஆண்குழந்தை ஒன்றைப் பிரசவித்தார்.

அனலைதீவு வைத்தியசாலையில் பிரசவ வாட் இருந்த போதும் அங்கே வைத்திய அதிகாரி இல்லாததால் குறிப்பிட்ட கர்ப்பிணிப் பெண் ஊர்காவற்றுறை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட போதே நேற்று முன்தினம் இச்சம்பவம் நிகழ்ந்தது.

ஊர்காவற்றுறைத் துறைமுகத்தைப் படகு சென்றடைந்ததும் அங்கிருந்த கடற்படையினர் உடனடியாக தாயையும், குழந்தையையும் ஊர்காவற்றுறை வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்ல உதவியதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-111)

## விநியோகம்

கொழும்புத்துறை, ஜூலை15

சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் இடம் பெயர்ந்த பாவனையாளர்களுக்கு சங்கக்கிளைகள் மூலம் அரிசி, சீனி, பருப்பு றெட்கவ் பால்மா என்பனவற்றை வழங்கி வருகிறது. (இ-30)

## கூ. சங்கத்தின் மோட்டார் சைக்கிள் விற்பனையகம்

அரியாலை; ஜூலை 15

யாழ். பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் ஸ்ரான்லி வீதியில் உள்ள சங்க அலுவலகத்தில் மோட்டார் சைக்கிள் விற்பனையகம் ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

முன்னர் இருந்த இடத்தில் செயற்பட்டு வந்த சங்கத்தின் தையலகம் சிறாம்பியடி வீதியில் உள்ள சங்கத்தின் விசேட விற்பனை நிலையத்திற்குஅருகில்இடம் மாற்றப்பட்டுள்ளது. (இ-17)

## தாச்சி மத்தியஸ்தர் பரீட்சை

நவாலி. ஜூலை 15

யாழ். மாவட்ட தாச்சி சங்கம் நடத்தும் மத்தியஸ்தர்களுக்கான பொதுப் பரீட்சை எதிர்வரும் 18 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 3 மணிக்கு இணுவில் மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

அத்துடன் மாவட்ட தாச்சி சங்கம் நடத்தும் தாச்சி சுற்றுப் போட்டிக்கான அணி ஒழுங்கு தேர்வு எதிர்வரும் 22 ஆம் திகதி புதன் மாலை 4 மணிக்கு இடம் பெறும். (இ-100)

## குடி தண்ணீர் தாங்கி

அரியாலை, ஜூலை15

ஜேர்மன் தொழில் நுட்ப உதவித் திட்டத்தின் கீழ் ஈச்சமோட்டைப் பகுதியில் மேலும் ஒரு குடிதண்ணீர்த் தாங்கி வைக்கப்படவுள்ளது.

இப்பகுதியில் ஏற்கனவே இரு குடிதண்ணீர்த் தாங்கிகள் மூலம் தண்ணீர் வழங்கப்பட்டு வருகின்றது. (இ-17)

## மலேரியா வில்லைகள்

நெல்லியடி, ஜூலை15

மந்திகை மருத்துவமனையின் மலேரியா தடுப்பு நிலையத்துக்கு மலேரியா [illegible] பிரதி சுகாதாரப் பணிப்பாளர் கையளித்துள்ளார். (இ-109)


## VACANCY

Project Accountant at FORUT Jaffna Office

Tasks:

- Maintain proper books of accounts.
- Monitor our revolving fund and credit activities.
- Provide training to our account clerks and to village-Society bankers.

This post involves extensive field travel.

Women are encouraged to apply for this position.

Closing date: 18th July 1998.

Applications with bio-data should be sent to:

The Project Manager
FORUT Jaffna,
67, Temple Road,
Jaffna town.

(57590)



## தேவை

யாழ். நகரில் உள்ள பிரபல்யமான விற்பனை நிலையத்திற்குக் கீழ்க்காணும் பதவிக்கு ஊழியர் தேவை.

காசாளர் (CASHIER)

மேற்சொல்லப்பட்ட பதவிக்கு ஆங்கிலம் எழுத வாசிக்கத் தெரிந்த அனுபவமுள்ள 40 – 60 வயதிற்குட்பட்ட காசாளர் தேவை. அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்,

விண்ணப்ப முடிவுதிகதி: 20 - 07 – 1998

இல: 760, மே/பா உதயன்

(57596)



## கேள்வி அறிவித்தல்

### பிரதம பொறியியலாளர், நிர்மாணத் திணைக்களம், யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணம், குருநகர் மத்திய மருந்தக பிரசவ விடுதி கட்டட விஸ்தரிப்பு வேலைக்கான கேள்விகள் யாழ்ப்பாணப் பிரதம பொறியியலாளரினால் 1998 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 04 ஆம் திகதி முற்பகல் 10–00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். பெறப்பட்ட கேள்விகள் எமது காரியாலயத்தில் உடனடியாகத் திறக்கப்படும்.

நிர்மாணப்பயிற்சி நிறுவனத்தில் (இக்ராட்) கட்டடம் நிர்மாணிப்பதற்கு தரம் எம்—9 இலும் அல்லது அதற்கு மேல் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தக்காரர் கேள்விப்பத்திரம் கோருவதற்கு தகுதியுடையோராவர்.

ஒப்பந்தப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன் இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விவரங்களடங்கிய பதிவுப் புத்தகத்தினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

கேள்விப் பத்திரங்களை யாழ்ப்பாணம் நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகத்தில் 1998 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29 ஆம் திகதி பிற்பகல் 4.45 மணிவரை மீளளிக்கப்படாத கேள்விக்கட்டணமாக ரூபா 250 ஐயும் மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணமாக 6,400/– ஐயும் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்கலாம். அத்துடன் ஏதும் மேலதிக விவரங்களை யாழ்ப்பாணம் நிறைவேற்றுப் பொறியியலாளரிடம் இருந்து வேலை நாள்களில் பிற்பகல் 4–45 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

எந்திரி. ந. சுந்தரமூர்த்தி,
பிரதம பொறியியலாளர்,
நிர்மாணத் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.

பிரதம பொறியியலாளர் அலுவலகம்,
நிர்மாணத் திணைக்களம்,
கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/4279)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடுவில் கிழக்கு

# கற்பகப் பிள்ளையார் கோயில்

# கும்பாபிஷேக விழாச் சிறப்புமலர்

15 - 07 - 1998



## பிரதமகுருவின் ஆசியுரை

சகல வளங்களும் நிறைந்து விளங்குகின்ற உடுவில் கிராமத்திலே கோயில் கொண்டு எழுந்தருளி ஓங்கார மூர்த்தமாக விளங்கி, அடியார்களுக்கு சகல விக்கினங்களையும் நீக்கி, அருள்புரிகின்ற வல்லவாம்பா சமேத கற்பக விநாயகப் பெருமானுக்கும், ஏனைய பரிவாரமூர்த்திகளுக்கும் இன்றைய தினம் குடமுழுக்கு விழா நடைபெறுவதையிட்டு மிக மகிழ்ச்சியடைகிறேன்.

அத்துடன் இக்கிராம மக்கள் அனைவரும் எம்பெருமான் அருளால் சகல செல்வங்களும் பெற்று, நிறைந்த செல்வங்களுடன் வாழ்வாங்கு வாழ வேண்டுமென்றும், இக்கிராம மக்களின் அயராத ஒத்துழைப்பால் இவ்வாலயம் மென்மேலும் திருப்பணிகள் பொலிவுறப் பெற்று மிளிர வேண்டுமென்றும், இதற்கெல்லாம் மூலாதாரமாக எம்பெருமான் திருவருள் கிட்ட வேண்டுமென்றும், கற்பகவிநாயகப் பெருமானுடைய பாதார விந்தங்களை பிரார்த்தித்துக் கொண்டு எனது ஆசியுரையை பூர்த்தி செய்து கொள்கிறேன்.

''ஸர்வே ஜனா சுருனேபவந்து
சுபமஸ்து

'' சிவாச்சார்ய சிரோமணி ''
சிவஸ்ரீ வை. பாஸ்கரக்குருக்கள்
பிரதமகுரு, கற்பகவிநாயகர் தேவஸ்தானம்
உடுவில்.

## கருணைமிகு கற்பக விநாயகர்

இடரினும், தளரினும், எமது முன்வினை தொடரினும் இறைவனை வழிபடுவதைவிட வேறு அறியாதவர்கள் இனிய அடியவர்கள். எத்தனையோ துன்பங்கள் சூழ்ந்த வேளையிலும் தம் குல தெய்வங்களை நினைந்து அத்தெய்வங்களின் அருளாட்சியே தமக்கு ஆறுதலெனக் கருதும் மெய்யடியார்கள் இத்திருப் பூமியில் வாழ்வதனாலேயே திருக்கோயில்களும், தெய்வீகமும் காப்பாற்றப் படுகிறது. உடுவில், இணுவில் திருவூர் எல்லையில் — கருணைமிகு தெய்வமாக விளங்கும் கற்பக விநாயகருக்கு குடமுழுக்கு வைபவம் நிகழ்வது அறிந்து ஆனந்தமடைகிறேன். அற்புதமும் அருளாட்சியும் நிறைந்த கற்பக விநாயகரின் கும்பாபிஷேகத்தோடு இவ்வையகம் புனிதம் பெற பிரார்த்தித்து, திருப்பணியில் ஈடுபட்ட திருவருட் செல்வர்களைப் போற்றி வணங்குகின்றேன்.

செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன்

## பெருஞ் சாந்தி விழா

உடுவில் கற்பக விநாயகனுக்குக் குடமுழுக்கு விழா நடைபெறுவது குறித்துப் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

கற்பகம் நினைத்ததை நல்குவது போல கற்பக விநாயகனும் தன்னுடைய அன்பர்களுக்கு அள்ளி அள்ளி ஆனந்தத்தையும் சுகபோகத்தையும் வழங்குபவன். உடுவில் வாழ் சைவ மக்கள் இப்பெருமானை உயிரினும் மேலாக உள்ளத்தில் வைத்துப் பூசிப்பவர்கள். குடமுழுக்கு விழாவினால் பக்தர்களின் உள்ளமும் உயிரும் குளிரட்டும். மேன்மைகொள் சைவநீதி உலகெலாம் விளங்கட்டும். ஆலயங்கள் எல்லாம் அருள் நிலையங்களாகவும் அறநிலையங்களாகவும் அமையட்டும் என்று பிரார்த்தித்து அமைகின்றேன்.

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
தலைவர்,
துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.

## தலைவரின் செய்தி

கற்பக பிள்ளையார் அடியார்களே!

கல்வி, செல்வம், வேளாண்மை நிறைந்து விளங்கும் உடுவிலாம் பெரும் பதியிலே வீற்றிருக்கும் கற்பக பிள்ளையார் ஆலய புனருத்தாரண பணிகள் இனிதே நிறைவு பெறுவதற்கு பண, பொருள் ரீதியில் உதவி புரிந்த உள்நாட்டு, வெளிநாட்டு அடியார்களுக்கும், உடல், உள ரீதியில் உதவி புரிந்த அடியார்களுக்கும் மகா கும்பாபிஷேக நாளாகிய இன்று வறுமை, பிணி நீங்கி சகல சித்திகளையும் கற்பகபிள்ளையார் அருள் பாலிப்பாராக

நா. பாலசிங்கம் தலைவர்

## பொருளாளரின் ஆசியுரை

எமது ஆலயம் 15-06-1998 ஆம் ஆண்டு பாலஸ்தாபனம் செய்யப்பட்டது. புதிய மூலஸ்தான விம்பத்துடன் தட்சணாமூர்த்தி ஆலயம் சண்டேஸ்வரர் ஆலயம் என்பன புதிதாக அமைக்கப்பட்டும் ஏனைய பரிவாரமூர்த்திகளுக்கும் குடமுழுக்கு நிகழ்வை இன்றைய சிறந்த நன்னாளில் தெய்வீக அலைகள் பாய்கின்ற வேளையில் இத்தெய்வீக அலையில் எல்லா மக்களும் மன ஒருமைப்பாட்டுடனும் ஒன்றித்து கற்பகவிநாயகரின் கருணைமழையில் நனைந்து பக்தி வெள்ளத்தில் மூழ்கும் இவ்வேளை நீங்கள் சகல சௌபாக்கியங்களும் பெறுவீர்களாக அத்துடன் இத்தெய்வீக கைங்கரியத்துக்கு மனோஉதவி, உடலுதவி புரிந்தவர்களுக்கும் பணஉதவி புரிந்தவர்களுக்கும் கற்பகதருவாய் விளங்குகின்ற உடுவையம்பதி கணபதியை எமது நெஞ்ச ஊஞ்சலில் இருத்தித் தாலாட்டத் தெய்வீக வாழ்த்துக்களை பரிபாலனசபையினர் சார்பில் சமர்ப்பித்துக்கொள்கின்றோம்.

ஜெயசோதிவரதன் (பொருளாளர்)


கும்பாபிஷேக விழாச் சிறப்புற இறைஞ்சுவோர்: ( சி/4287 )

| | | | | |
|---|---|---|---|---|
| கே. எம். விக்கினேஸ்வரா லங்கா எரிபொருள் நிரப்பு நிலையம் கே. கே. எஸ். வீதி, மருதனார் மடம். | சிற்றி காமன்ஸ் கே. கே. எஸ். வீதி, இணுவில். | காங்கேயன் பேக்கரி கே. கே. எஸ். வீதி, மல்லாகம். | நாதன் சகோதரர் கே. கே. எஸ். வீதி, இணுவில். | விநாயகர் ஹாட்வயர்ஸ் கே. கே. எஸ். வீதி, இணுவில். |


## பொலீஸ் விசாரணைக்கு அழைக்கப்பட்டோர்

யாழ்ப்பாணம், ஜூலை 15

காணாமற் போனோர் தொடர்பாக காங்கேசன் துறையிலுள்ள மனித உரிமைகள் பிரிவுக்கு அறிவித்தவர்களின்முறைப்பாடுகளை நேரடியாகப் பெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

நாளையும், 17ஆம், 18ஆம் திகதிகளிலும் மு. ப. 10 மணிக்கு யாழ். சென்மேரிஸ் பாடசாலையில் இந்த முறைப்பாடுகள் இராணுவ பொலீஸாரினால் எழுத்து மூலம் பதிவு செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கீழ்வருபவோரை நேரில் வந்து முறைப்பாடுகளைத் தெரிவிக்குமாறு காங்கேசன் துறையிலுள்ள மனிதஉரிமைகள் பிரிவு கேட்டுள்ளது.

நாளை 16ஆம்திகதிஅழைக்கப்பட்டுள்ளவர்களின் விவரம் வருமாறு:-

★ யோசப் அந்தோனிப்பிள்ளை-393/3, டேவிற் றோட். குருநகர்.

★ மேரி பபீலா- 138/1, கொன்வென்ற்வீதி. குருநகர்,

★ சுரேஷ்குமார் சிவமாலினி, டிஸ்பென்சறி லேன், கல்வியங்காடு.

★ சந்திரகுமார் பராசக்தி- உப்புக்குளம் வீதி, கொழும்புத்துறை.

சுப்பிரமணியம் செல்வராசா- மூளாய், சுழிபுரம்.

17 ஆம் திகதி அழைக்கப்பட்டுள்ளவர்களின் விவரம்;-

★ இரத்தினசிங்கம் இந்திராணி- ஐயனார்வீதி, புன்னாலைக்கட்டுவன் தெற்கு.

★ அப்புத்துரை குணரத்தினம்- 393/30, கோவில்வீதி. நல்லூர்.

★ தம்புஜெகநாதன், ஆஸ்பத்திரிவீதி, கொட்டடி.

★ ஆசீர்வாதம் பெர்னான்டோ- 43/2 ஏ றோட், கொய்யத்தோட்டம்.

★ தாமோதரம் பிள்ளை தங்கவடிவேலு- அத்தாய் அல்வாய்.

★ ஆறுமுகம் சாம்பசிவம்- கப்புது, கரவெட்டி.

18 ஆம் திகதி அழைக்கப்பட்டுள்ளோர் விவரம்;-

★ சிவகுருநாதன் ரமணி- கோட்டைக்காடு, மல்லாகம்.

★ இரத்தினம் கோபால தேவி- கொட்டியா வத்தை, தெல்புரம் மேற்கு.

★ சின்னத்துரை துரைராஜா- சுதுமலை தெற்கு.

★ மரியாம்பிள்ளை லூர்த்தம்மா- பிடாரி கோவிலடி, வீரபுரம் ஆனைக்கோட்டை.

★ சாமுவேல் தர்மரத்தினம்- அளவெட்டி மேற்கு. அளவெட்டி.

★ செல்வம் [illegible]- தொல்புரம் [illegible] புரம்.

(அ-5)

## பரிசளிப்பும் நிறுவுநர் தினமும்

சங்குவேலிஅரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் நினைவும இன்று புதன் கிழமை பிற்பகல் ஒருமணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் சு.சண்முககுலகுமரன் தலைமையில் நடைபெறும்.

உடுவில் கல்விக் கோட்டக் கல்வி அதிகாரி அ. தற்பரானந்தன் பிரதம விருந்தினராகவும், ஆசிரியர் ஆறு. திருமுருகன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்கின்றனர்.

(இ-152)

## முத்தமிழ் விழா

யாழ். புனித மரியாள் வித்தியாலய முத்தமிழ் விழா இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில் பிரதம அதிதிகளாக யாழ். பல்கலைக்கழக பதிவாளர் கலாநிதி. க. குணராசா, திருமதி கமலா குணராசா ஆகியோர் கலந்துகொள்வார்கள். சிறப்பு விருந்தினர்களாக முன்னாள் உதவிக் கல்விப்பணிப்பாளர் கோ. சி. வேலாயுதம், ''மதுரகவி'' காரை. எம். பி. அருளானந்தன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். மாணவர்களின் இயல், இசை, நாடகம் [illegible] முத்தமிழ் நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

## இளம் ஆணின் வயிற்றில் காணப்பட்ட கர்ப்பப்பை!

### கண்டியில் சம்பவம்

கொழும்பு, ஜூலை 15

திருமணமான — 32 வயதுடைய — இளம் குடும்பஸ்தர் ஒருவரின வயிற்றில் கர்ப்பப்பை இருந்தமை கண்டு பிடிக்கப்பட்டு, சத்திர சிகிச்சை மூலம் அது அகற்றப்பட்டது.

கண்டி மருத்துவமனையில் அண்மையில் இந்தச் சந்திர சிகிச்சை இடம்பெற்றது.

திருமணமாகி பத்து ஆண்டுகளாகியும் மகப்பேறு இல்லாத காரணத்தால் அதற்கு கிகிச்சை பெற்று வந்த இந்த நபர் வயிற்றில் அசௌகரியம் இருப்பதாக முறையிட்டார். அவருக்கு வயிற்றில் புற்றுநோய் இருக்கலாம் எனச் சந்தேகித்த மருத்துவர்கள் அவருக்கு சத்திர சிகிச்சை செய்தனர்.

அப்போது வயிற்றில் கர்ப்பப்பை, சூலகம், பலோப்பியன் குழாய் போன்ற பெண் அவயவங்கள் இருப்பதைக் கண்டு டாக்டர்கள் ஆச்சரியமடைந்தனர்: அவற்றை அகற்றினர்.

தற்போது பூரண சுகமடைந்துள்ள இந்நபர் மருத்துவமனையிலிருந்து வீடு திரும்பியுள்ளார்.

மாதவிடாயின் போது பெண்களுக்கு வெளியேறும் திரவங்களும் இவரது வயிற்றில் காணப்பட்டதாக சத்திர சிகிச்சை மேற்கொண்ட டாக்டர்கள் தெரிவித்தனர்.

''ஒரு சிலர் வெளித்தோற்ற அமைவாலும் வேறு சிலர் அந்தரங்க அவயங்களின் அமைவாலும் அலிகள் ஆகின்றனர். ஆனால் இந்த நோயாளி திடகாத்திரமான ஆணாகவும், மறுபுறத்தில் பெண்களுக்கான அறிகுறிகளையும் கொண்டிருப்பது ஒரு புதுமையான சம்பவமாகும்'' என்றும் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

(உ-10-21)

## இரங்கல் கூட்டம்

வலி. தெற்குஜூலை 15

யாழ்ப்பாணம் கல்வி வலயம் இரண்டின் இசை ஆசிரியர்களுக்கான சேவைக்கால பயிற்சிக் கருத்தரங்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்ற போது அண்மையில் காலமான இசை ஆசிரியை திருமதி தாட்சாயணி சிவானந்தசர்மாவின் ஆத்ம சந்திக்கான பிரார்த்தனையும், இரங்கற் கூட்டமும் நடைபெற்றன.

(இ-152)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீரமக்கள் தினத்தை ஒட்டிய நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 15

புளொட் அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வீரமக்கள் தினத்தை ஒட்டிய இரண்டாம் நாள் நிகழ்வாக நேற்று சிரமதானப் பணிகள் இடம்பெற்றன.

சாவகச்சேரி வைத்திய சாலைச் சுற்றாடல் பகுதியிலும், யாழ். நகரில் உள்ள தந்தை செல்வா நினைவுத் தூபி அமைந்துள்ள பகுதியிலும் சிரமதானப் பணியில் புளொட் உறுப்பினர்கள் ஈடுபட்டனர்.

வீரமக்கள் தினத்தையொட்டி யாழ். பஸ் நிலையப் பகுதியில் அலங்கார வளைவுகள் அமைக்கப்பட்டுள்ளன. (உ-3-15-139)

# மிதிவெடிகளில் சிக்கி கால் இழக்கும் மாடுகள்

தென்மராட்சி, ஜூலை 15

தனன்கிளப்பு அருகுவெளி வயலில் மேய்ச்சலுக்குச் செல்லும் மாடுகள் அங்கு புதைக்கப்பட்டுள்ள மிதிவெடிகளில் அகப்பட்டு படுகாயமடையும் சம்பவங்கள் அடிக்கடி இடம்பெற்று வருகின்றன.

நேற்று முன்தினம் சின்னையா என்பவரின் இரண்டு மாடுகள் மிதிவெடியில் அகப்பட்டுகால்களை இழந்ததாக தெரிவிக்கப்பட்டது. கடந்த இரு வாரங்களில் பத்துக்கு மேற்பட்ட மாடுகள் மிதிவெடியில் அகப்பட்டுள்ளதாகவும் —

மிதிவெடியில் அகப்படும் மாடுகளை மீட்பதற்கு கூட அப்பகுதிக்குச்செல்ல மக்கள் அஞ்சுவதாகவும் — தெரிவிக்கப்பட்டது. [உ-117]


உ

இருபாலை கிழக்கு

அருள்மிகு

**கந்தசுவாமிகோயில்**

(முனி அம்பாள் கோயில்)

நூதன அஸ்டபந்தன நவகுண்டபக்ஷ பிரதிஷ்டா

**மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்**

இன்று 15 -- 7 -- 98 புதன்கிழமை

சூரிய உதய கோதூளி மூர்த்தத்தில் காலை 6 மணிக்கு மஹா கும்பாபிஷேகம் சிறப்புற நடைபெற முருகப்பெருமானின் பாதக் கமலங்களை இறைஞ்சிவேண்டுகின்றோம்.

**வேல் றேடேஸ்**

114, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

**A. M. T. எரிபொருள் நிலையம்**

இருபாலைச் சந்தி.

**ஜசோ மரக்காலை**

இருபாலைச் சந்தி.

(சி/ 4284)


## மாகாணத்...

(முதலாம் பக்கத் தொடர்)

ஒத்திவைப்பது பற்றிய பிரகடணம் ஏதும் இன்று நண்பகலுக்கு முன்னர் வெளியிடப்படாவிட்டால் —

தமக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்துக்கு இணங்க, தேர்தல்களை நடத்துவதற்கான திகதிகளை தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க இன்று உத்தியோகபூர்வமாக அறிவிப்பார் என தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

எனினும் —

தேர்தல்களுக்கான திகதிகள் அறிவிக்கப்பட்ட பின்னரும் கூட, அவற்றை ஒத்திவைப்பதற்கான பிரகடணத்தை அரசு வெளியிட முடியும் எனத் தெரிவிக்கப்பட்டது.

மாகாண சபைத் தேர்தல்களை அடுத்த மாதம் நடத்துவதா அல்லது நவம்பருக்கு ஒத்தி வைப்பதா என்பது குறித்து அமைச்சரவை தீர்மானிக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. [உ-5]

## ஓஷன்...

(முதலாம் பக்கத் தொடர்)

னேயே கப்பல் பருத்தித்துறைக்குவந்துசேர்ந்துள்ளது என்றும் கூறப்படுகின்றது.

கப்பலில் உட்புகுந்தகடல் நீர் நீரிறைக்கும் இயந்திரம் மூலம் தொடர்ந்துவெளியேற்றப்பட்டு வருகிறது.

கடல் நீர் உட்புகுந்ததால் கப்பலுக்குள் இருந்த பல அத்தியாவசியப் பொருள்கள் நனைந்து சேதமடைந்துள்ளன.

இக்கப்பலிலிருந்துபொருள்கள் இறக்கும்பணி ஒருபுறம் நடைபெற, மறுபுறத்தில் உட்புகுந்த கடல் நீர் நீரிறைக்கும் இயந்திரம் மூலம் வெளியேற்றப்பட்டுவருகிறது (உ-173)

## மேலும்...

(முதலாம் பக்கத் தொடர்)

மாவட்ட கல்வி அலுவலகங்களில் வைத்து வழங்கப்படும் என்று மாகாணக் கல்வியமைச்சுச் செயலர் சு. டிவகலால தெரிவித்தார்.

வடக்கு—கிழக்குமாகாணத்தில் இன்று நியமனம் பெறும் ஆயிரத்து 61 பட்டதாரிகளில் வர்த்தக, முகாமைத்துவ துறைகளில் பட்டம் பெற்றவர்கள் சேர்க்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. [உ-3]

# கொழும்பு பயணிகள் ரயிலில் கொள்ளையர்களின் அட்டகாசம்

# பொலீஸாருக்கு கத்திக்குத்து

கொழும்பு, ஜூலை 15

அழுத்கமவில் இருந்து கொழும்பு நோக்கி வந்து கொண்டிருந்த பயணிகள் ரயிலில் பயணிகள் வேடத்தில் ஏறிய கொள்ளையர்கள் ரயிலில் இருந்த பயணிகளின் நகைகளையும், உடைமைகளையும் ஆயுத முனையில் கொள்ளை அடித்தனர்.

எனினும் அவர்கள் தப்பிச் செல்ல முயன்றபோது பொலீஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

கடந்த திங்கட்கிழமை இச்சம்பவம் இடம்பெற்றது.

கொள்ளையர்களிடம் கைக்குண்டுகள், பிஸ்டல் மற்றும் கூரிய ஆயுதங்கள் இருந்தன எனத் தெரிவிக்கப்படுகிறது.

பயணிகளிடமிருந்து பொருள்களை கொள்ளையடித்துக்கொண்டு எகொட உயன ரயில் நிலையத்தில் ரயிலில் இருந்து தப்பிச்செல்ல அவர்கள் முயன்றபோது அப்பகுதியை ஏற்கனவே சுற்றி வளைத்திருந்த பொலீஸார் கடும் மோதல்களின் பின்னர் அவர்களைக் கைது செய்தனர்.

ரயிலில் பயணம் செய்து கொண்டிருந்த பொலீஸ்காரர் ஒருவர் கொள்ளையர்களின் கத்திக்குத்துக்கு இலக்கானார். அவர் அணிந்திருந்த தங்கச் சங்கிலியும், மோதிரமும் கொள்ளையர்களால் அபகரிக்கப்பட்டன.

திங்கள் காலை காரியாலயக் கடமைகளுக்காகக் கொழும்பை நோக்கி வந்து கொண்டிருந்த பெண் பயணிகளின் தங்க நகைகளும் கொள்ளை அடிக்கப்பட்டன.

மாத்தறையில் இருந்து வவுனியாவுக்கு மாற்றலாகி கடமையைப் பொறுப்பேற்க வந்து கொண்டிருந்த ரஞ்ஜித் சமன் என்ற பொலீஸ்காரரே கொள்ளையர்களின் கத்திக்குத்துக்கு இலக்கானவர் ஆவார். (இ-10)

# கொடிகாமம் சந்தையில்

# திடீர் சோதனையில் சிக்கிய மாம்பழங்கள்

மருந்துவிசிறி பழுக்கவைக்கப்பட்ட பெருமளவு மாம்பழங்கள் கொடிகாமம் சந்தையில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த போது சுகாதாரத் திணைக்கள பரிசோதனைக் குழுவினரால் கண்டுபிடிக்கப்பட்டுப் பறிமுதல் செய்யப்பட்டு அழிக்கப்பட்டன.

நேற்று முன்தினம் கொடிகாமம் நகர்ப்பகுதி வர்த்தக நிலையங்கள் மீது நடத்தப்பட்ட திடீர் பரிசோதனையின்போதே இவ்வாறு சந்தையில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த மாம்பழங்கள் கைப்பற்றப்பட்டன.

வர்த்தக நியைங்களில் இருந்து— காலாவதியான— பெருமளவு உணவுப் பொருள்களும் கைப்பற்றி அழிக்கப்பட்டன. (உ-117)

## சிறுநீரைப்...

(முதலாம் பக்கத் தொடர்)

செவிப்பறை கிழிந்த நிலையில் அவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதாகவும்— தெரிவிக்கப்படுகின்றது.

காதிலும், தொண்டையிலும் பாதிப்பு ஏற்பட்ட நிலையில் இந்த மாணவன் மேலதிக சிகிச்சைக்காக கண்டி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளான்.

இந்தப் பகிடிவதை நடவடிக்கையில் ஈடுபட்டதாகக் கூறப்படும் ஐந்து மாணவர்கள் பகிடிவதைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் ஜி.சீ.ஈ. (உயர்தர) பரீட்சைக்கு இந்த ஐந்து மாணவர்களும் தோற்றவிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-3-6-21)

## ஆணைக்குழு...

(முதலாம் பக்கத் தொடர்)

வமற்றவையும் ஆதலால், அவற்றை வலுவிழக்கச் செய்யவேண்டும் என்று அவர் தமது மனுவில் கேட்டுள்ளார்.

இம்மனுவில் பிரதிவாதிகளாக முன்னாள் மேல் நீதிமன்ற நீதிபதியும், இந்தோனேஷியாவுக்கான தற்போதைய இலங்கைக்கான தூதுவருமான ஆர்.திஸ்ஸ டயஸ் பண்டாரநாயக்க, மாத்தறை மேல் நீதிமன்ற நீதிபதி ரி, டயிள்யூ எதிரிசூரிய ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

உயர் நீதிமன்ற நீதியரசர்களான ஹெக்டர் யாப்பா, கே. குலதுங்க ஆகியோர் முன்னிலையில் இன்று இந்த மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும். (உ-10-3)

## பாடசாலை...

(முதலாம் பக்கத் தொடர்)

வீதிப்போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பதற்காகவும்—

பாதுகாப்புக் கடமையில் ஈடுபடும் படையினர் தங்க வசதியாகவும்—

இப்பாடசாலைகள் மூடப்படுவதாகக் கல்வி, உயர் கல்வி அமைச்சுத் தெரிவித்தது. (உ-10-3)


ஜூலை 1998

இன்னிசை நற்செய்திப் பெருவிழா

**மீண்டும் உங்களுடன்**

**தந்தை பெர்க்மான்ஸ்**

இயேசுகிறிஸ்துவினால் உங்களுக்கு சமாதானமும் விடுதலையும் கொண்டுவரும்

"ஆறுதலின் தொனி"

ஆறுதலளிக்கும் தேவ கானங்கள்; விசேட ஜெபங்கள்

| இடம் | காலம் | நேரம் |
|---|---|---|
| ★ துரையப்பா விளையாட்டரங்கு யாழ்ப்பாணம் | 15 - 17 | பி. ப. 3. 30 |
| ★ செங்குந்தா இந்துக்கல்லூரி மைதானம், கல்வியங்காடு/ நல்லூர். | 18 - 19 | பி.ப. 3.30 |

உங்களையும் அன்புடன் அழைக்கின்றோம்!

பிரவேசம் இலவசம்.

(இ/4206)



**சுனில் ஆட்ஸ்**

**SUNIL ARTS**

எமது வாடிக்கையாளர்களின் நன்மை கருதி எமது சேவை கொழும்பிலுள்ள சிறந்த கலர் லாபுக்கு (Colour Lab) மாற்றப்பட்டுள்ளது என்பதை வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தரமான பிரதிகள்! துரித சேவை!

சகல அளவிலும் பிரதிகள்!

படப் பிடிப்பாளர்களுக்கு குறைந்த கட்டணம்.

20 — 07 — 98 அன்று பட சுருள்கள் கொழும்புக்கு அனுப்பப்படும்.

சுனில் ஆட்ஸ்

272, ஸ்ரான்லி றோட்,

யாழ்ப்பாணம்.

(சி/4283)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15-07-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org